12 பக்கங்கள் விலை 50 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

"NAM NADU" Official Organ of the D. M. K.

மலர்-2 | திருவள்ளுவர் ஆண்டு 2010 11-2-1979 | இதழ் 21

பெயரைச் சொல்லி ஏமாற்ற முடியாது!

தமிழர்கள் எங்கெங்கே வாழ்கிறார்களோ, அவர்களெல்லாம் தி.மு.கழகம் தான் தங்களுக்காக இருக்கின்ற நம்பிக்கை நட்சத்திரம், கலங்கரை விளக்கம் என்று கருதிக்கொண்டிருக்கிறார்கள். அண்ணா அவர்கள் வகுத்த கொள்கைகளை நெஞ்சில்ஏந்தி தி.மு. கழகம் இன்றைக்கு மக்கள் பணிகளை ஆற்றி வருகிறது.

அண்மைக் காலத்தில் தமிழ்நாட்டில் நடைபெற்று வருகின்ற சம்பவங்கள். இரண்டாண்டுக் காலமாக நடைபெற்று வருகின்ற ஆட்சியின் அலங்கோலங்கள் அதைக் கண்டித்து இன்றைக்கு தமிழ்நாட்டு மக்கள் கிளர்ந்தெழுகின்ற காட்சிகள் இதையெல்லாம் காணும்போது, இத்தகைய கொடுமைகள் நீக்கப்பட வேண்டும் என்பதற்காகத் தமிழகத்தில் இருக்கிற அனைத்துக் கட்சிகளும் குரல் கொடுப்பதை, தமிழ் நாட்டு மக்கள் அதை ஆதரித்துக் கிளர்ந்து எழுந்திருப்பதைக் காணும் நேரத்திலும், நண்பர் எம் ஜி. ஆருடைய ஆட்சி ஐந்தாண்டுக் காலம் தமிழகத்திலே நீடிக்க வழியிருக்கிறதா? என்ற கேள்வியைக்கூடத் தமிழகத்தில் எங்கள் உள்ளத்திலல்ல, நண்பர் எம். ஜி. ஆருடைய உள்ளத்திலேயே எழுந்திருப்பதை நாங்கள் பார்க்கிறோம்.

அதற்கு என்ன காரணம்? அண்ணாவின் பெயரைச் சொல்வதாலேயே அவரது கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்பதாகிவிடாது. பெரியாரின் பெயரைச் சொல்வதாலேயே பெரியாரின் கொள்கையினை ஏற்றுக் கொண்டிருக்கிறோம் என்று ஆகிவிடாது. அம்பேத்கார் பெயரைச் சொல்லி விடுவதாலேயே அவர்எந்தச்சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டாரோ அந்தக் கொள்கையை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம் என்று சொல்ல முடியாது

பெயர்களைச் சொல்லி ஊர்களை ஏமாற்றுவது ... பெயர்களைச் சொல்லி மக்களை ஏமாற்றுவது. வாக்குகளைப் பெறுவது என்பது இனிமேல் நாட்டு மக்களிடம் செல்லாத ஒன்றாகி விட்டது. பெயரல்ல முக்கியம் தலைவர்களின் பெயரை ஆயிரம்முறை சொல்வதாலேயே அந்தந் தலைவர்கள் எந்த லட்சியத்துக்காகப் பாடுபட்டார்களோ அந்த லட்சியத்திற்கு நாம் நம்மை அர்ப்பணித்துக் கொள்கிறோம் என்று அர்த்தமாகிவிடாது

அண்ணா அவர்கள் தன்னுடைய வாழ்நாள் முழுவதும் மக்களுக்காக எந்த லட்சியத்திற்காகப் பாடுபட்டார்? உலகத்தில் தமிழர்கள் எங்கெல்லாம் வாழ்கிறார்களோ அவர்களது கலாச்சாரம், பண்பாடு, இலக்கியம், வரலாறு காப்பாற்றப்பட வேண்டும் என்பதைத்தான் அண்ணா தனது இலட்சியமாகக் கொண்டிருந்தார்.

-கலைஞர்

(கோலார் தங்கவயல் கூட்டத்தில்)

★

எதையும் தாங்கும் இதயம் உறங்குமிடத்தில்

கழகக் காவலர்கள்!

★



அண்ணா நினைவு நாளான பிப் 3-ஆம் நாள் அண்ணா நீள் துயில் கொள்ளுமிடத்தில் தலைவர் கலைஞர், பொதுச் செயலாளர் பேராசிரியர், பொருளாளர் சாதிக் மற்றும் கழக முன்னணியினர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய காட்சி.

★

10-3

கொள்கைக் குன்றும்

இந்தியாவின் விடுதலைக்காக இராணுவத்தைத் திரட்டிய தீரர் சுபாஷ் சந்திர போஸ் நினைவாலே உள்ள சேலம் மைதானத்தில் பிப்ரவரி ஆரும் தேதி புரட்சித் தலைவர் (!) முழங்கியிருக்கிறார்.

ஆம்! இராணுவத்தையே சந்திக்கத் தயார் என்று மதுரையிலே முழக்கமிட்டதும் வருமான வரி இலாகா விட்ட அறிவிப்புக் கடிதத்தைக் கண்டு நடுங்கிய புரட்சித் தலைவர் தான் முழக்கமிட்டிருக்கிறார்.

காவல் துறையின் பொதுவான விதி இரவு பத்து மணிக்கு மேல் பொதுக் கூட்டம் நடத்தக் கூடாது என்பதாகும்.

ஆனால், முதலமைச்சர் மட்டும் தனது வீர வுரையை பத்து மணிக்கு மேல் தொடங்கலாம்.

மற்ற அரசியல் கட்சித் தலைவர்கள் இரவு பத்து மணியைக் கடந்து பத்து நிமிடம் பேசி விட்டாலும் காவல் துறைச் சட்டப்படி குற்றம்

ஆனால் முதலமைச்சர் எம் ஜி. ஆர். இரவு 10 45 மணிக்குப் பேசத் தொடங்கி, நள்ளிரவு 12 15 மணிக்கு உரையை முடித்திருக்கிறார்.

உறுப்பினர்கள, நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவர்களை யெல்லாம் முதல்வர் எம். ஜி ஆர். எந்த மட்டத்தில் சேர்க்கிறார்.

நடுமட்டத்திலா – கீழ் மட்டத்திலா? எந்த மட்டப பட்டியலில் இவர்களெல்லாம் இடம் பெறுகிறார்கள்? வர்களைப்பற்றி மக்கள் மத்தியில் ஐயத்தைக் கிளப்பி விடுகிறாரே இதற்கு அர்த்தம்என்ன? முதல்வர் அமைச்சர்களைப் பற்றிக் கொடுத்த நற்சான்றிதழை இவர்களுக்கும் கொடுக்க முன் வரவில்லையே என்?

"அவர் உரையை அமைதியுடனும் ஆர்வத்துடனும் கேட்ட. பொது மக்கள் முதல்வரின் உரையில் முக்கிய இடங்கள் வந்தபோதெல்லாம்

றார்களே என்பதால் ஊழலை ஒழித்துவிட்டேன் என்று உரக்கச் சொல்ல முடியவில்லையோ?

அன்றுடம் இந்தஆட்சியில் ஊழல் மலிந்துகொண்டிருக்கிறது என்பதால் முதல்வர் எம். ஜி. ஆர். சேலத்துப் பேச்சில் ஊழலை ஒழித்துவிட்டேன் என்று ஒரு வார்த்தைகூட பேச முடியவில்லையோ?

அரசுவிழா என்றாலும் அங்கெல்லாம் கலைஞருக்கு அர்ச்சனை செய்யாமல் விடமாட்டார்.

அப்படியிருக்க சேலம் பொதுக்கூட்டம் ஆளும்கட்சி நடத்துகின்ற பொதுக்கூட்டம் ஆயிற்றே! எளிதில்விடுவாரா என்ன?

"இப்போதெல்லாம் அண்ணாவின் பெயரைச் சொல்

சா. க.

கிறார் கருணாநிதி" ... எம்.ஜி. ஆரின் புதிய குற்றச்சாட்டுகளில் இதுவும் ஒன்று.

அண்ணாவின் நினைவு அகிலத்தில் நிலைத்து நிற்கவேண்டும் என்பதற்காக அற்புதமான அண்ணா சதுக்கம் அமைத்த கலைஞரை — சென்னை மாநக

கோமாளியும்!

இது அவரது அகராதிப்படி கட்டுப்பாடு மீறுத கண்ணியமான செயல்!

அவரைப் பொறுத்தவரை இதுவும் ஒரு புரட்சிகரமான நடவடிக்கையாகும்.

"தேர்தல் நேரத்தில் மக்களுக்கு வாக்குறுதி கொடுத்தோம் இலஞ்சத்தை ஊழலை ஒழிப்போம்" என்று சொன்னோம். இன்று மேல் மட்டத்தில் இலஞ்சம் இல்லை. அமைச்சர்கள் லஞ்சம் வாங்கினார்கள் என்று யாரும் கூற முடியாது. அந்த வகையில் இலஞ்சத்தை ஒழித்துக் கட்டி வருகிறோம்." இது அவரதுபேச்சின் முக்கியப் பகுதி. அவர் கட்சிப் பத்திரிகையில் அப்படியே வெளியிட்டிருக்கிறார்கள்.

அமைச்சர்கள் யாரும் இலஞ்சம் வாங்கினார்கள் என்று கூற முடியாது என்று அழுத்தம் திருத்தமாக கூறிப் பார்க்கிறார் முதல்வர்.

மேல் மட்டம் என்று அமைச்சர்களை மட்டுமே குறிப்பிடுகிறார் அப்படியென்றால் அமைச்சர் நிலையினுக்குக் கீழே உள்ள அமைச்சர் செயலர்கள், அவரது கட்சி சட்டப் பேரவை

கை தட்டி ஆரவாரம் செய்து வரவேற்றனர்" இதுவும் அந்தச் செய்தியின் ஒரு பகுதியே

மேல் மட்டத்தில் இலஞ்சம் இல்லை.அமைச்சர்கள் லஞ்சம் வாங்கினார்கள் என்று யாரும் கூறமுடியாது. அந்தவகையில் இலஞ்சத்தை ஒழித்துக்கட்டி வருகிறோம்" என்று முதல்வர் எம் ஜி. ஆர் உறுதியோடு கூறியபோது கூடியிருந்த பொதுமக்கள் இவரது உண்மையான கருத்தை(?) கையொலி எழுப்பி வரவேற்கவில்லையே ஏன்?

உண்மைக்கு மாறான கருத்தை முதல்வர் இவ்வளவு துணிச்சலாகக் கூறுகிறாரே என்று கூடியிருந்த பத்து இலட்சம் (?) மக்கள் பதறிப்போய் விட்டார்கள் போலும். அதனால்தான் கரவொலி எழுப்பவில்லையோ (?)!

அ.தி.மு.க, ஆட்சியின் ஊழல்களை அண்மைக்காலமாக அடுக்கடுக்கான ஆதாரங்களோடு எதிர்கட்சித் தலைவர் கலைஞரும் இன்ன பிறரும் சட்டப் பேரவையிலே அம்பலப் படுத்தி கொண்டிருக்கி

ரின் பெருஞ்சாலைக்கு அண்ணா சாலை எனும் பெயர் சூட்டி, புதியதாகக் கட்டிய பாலத்

தொடர்ச்சி 11ம் பக்கம்

வேறு சான்று வேண்டுமா?

உலகில் ஸ்காட்லாந்து காவல்துறையினரை அடுத்து திறமைமிக்க காவல் துறை என்று புகழ் பெற்ற தமிழக காவல் துறை இன்று ஆளுங் கட்சியினரின் கட்டுக்குள் அடங்கி செயலாற்ற இயலாத நிலையில் உள்ளது.

'பீடி லேபிளை' வைத்துக் கொண்டு கொலை செய்த குற்றவாளியைக் கண்டுபிடித்த அதே காவல்துறையினரால் இன்று பிரேமா கொலை செயல்பட்டு மாதகள் பலவாயினும் இன்னும் கொலையாளிக் கண்டுபிடிக்கப்படவில்லை.

இளந்தளிர் இளஞ்செழியன் கொலை விபத்தாக மாறிவிட்டது. காவல் நிலையங்களிலேயே தாய்மார்களின் கற்பு சூறையாடப் படுகிறது.

புட்லூர் தண்டபாணி என்பார் ஆளுங்கட்சியைச் சார்ந்தவரால் கொலைசெய்யப் படுகின்றார், கலைஞர் இதனை ஆதாரத்துடன் சட்டமன்றத்தில் நிரூபித்தும் இன்றளவும் நடவடிக்கைஎடுத்ததாகத் தெரியவில்லை நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் முருகையனின் கொலைவழக்கு வேறுதிசைநோக்கிச் செலுத்தப்ப கின்றது. தலைவர் கலைஞர் அவர்களைக் கொலைசெய்ய ஆளுங்கட்சியினை சேர்ந்தவர்களே முயற்சி செய்கின்றனர். முடியுமா அவர்களால் ......?

கோமாளிகளின் கட்சி ஆட்சியை அமைத்த பின்பு நாட்டில் பதிவு செய்த குற்றப புகார்கள் அதிகரித்து உள்ளன. 1977ல் 39,688 புகார்கள் பதிவுசெய்யப்பட்டன. ஆனால் 1978ல் அது 41 739 ஆக உயர்ந்துவிட்டது. காரணம் காவல்துறை நிர்வாகத்தில் குண்டர்களை அதிகம் கொண்ட ஆளுங்கட்சியினரின் குறுக்கீடுதான்! இல்லாவிடில் லாக்கப்பை உடைத்துத் தனது மகனை கிணத்துக்கடவுத்தொகுதி சட்டமன்ற உறுப்பினரால் வெளிக்கொணர்ந்து இருக்க முடியுமா? தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு சீர் குலைந்து விட்டது என்பதற்கு இதைவிடச்சிறந்த சான்று வேறு வேண்டுமோ?

உளிவீசி ஒளி அணைக்க முடியுமா?

எங்கள் இதயத் துடிப்பே!
உளிதனை எறிந்து உன்
உயிரைக் கவர்ந்திட நினைத்தானுமே?
செய்தி கேட்ட செவிப்பறையுடன்
எங்கள் இதயமும் கிழிந்தது போலானது
உடல், உள்ளம், நெஞ்சம் நினைவு
அனைத்தும் துடித்துவிட்டன

எங்களை ஆளும் மாசற்ற மாணிக்கமே!
இந்நிலையில் எப்படியுன்னால்
சிரிக்க முடிகிறது?
உனக்குப் பயமேயில்லையா?
பதறுகிறோம்.
நம் பரம்பரைக்கே இல்லை,
பகருகிறாய் நீ தான்
எப்படிப்பட்ட நெஞ்சழுத்தக்காரன்
வைர நெஞ்ச வால்டேர்
உன்னிடம் பிச்சை வாங்கவேண்டும்
எங்கள் கரங்களைக் கட்டியது போதும்
விலங்கைத் தகர்க்க மாட்டாய்;
உன்னிடம் கெஞ்சுகிறோம்
இத்தனை பொறுமை
ஆகுமா உனக்கு?
எங்கட்கு ஆணையிட மாட்டாயா?
அலெக்சாண்டர் போல்
ஒரு வார்த்தை
ஒரே வார்த்தை
ஒரே ஒரு வார்த்தை
உன்னிடம் கதறுகிறோம்
புன்னகை.
அந்தப் புன்னகை,
அனைத்தையும் தாங்கி
அல்லியாய்ச் சிரிக்கிறாயே
உன்னால் எப்படி முடிகிறது?



நாங்கள் கேட்கிறோம்.
எதையும் தாங்கும் இதயத்தை
என் தலைவன் தந்துள்ளான்
நீ சொல்கிறாய்.
அப்பப்பா!
உனக்கா பேசத் தெரியாது.
உன் கரங்களைப் பிடித்து
உருகுகிறோம்,
வைரத்தை வைரத்தால் தானே
அறுக்க வேண்டும் என்று
நீ சொல்கிறாய்.
தம்பி! நாம் வைரம்
அவர்கள் வெறும் கண்ணாடி.
உன்னைப் பேச்சில் வெல்ல
எங்களால் முடியுமா?
நஞ்சை நஞ்சால்தானே
முறித்தாக வேண்டும்.
உன்முன் விழுந்து மன்றாடுகிறோம்.
உன் வாய் உதிர்க்கிறது
பாசச் சொற்களை
என் தம்பியர் நஞ்சா?
அமுதமல்லவா? என்று
பூரிக்கிறோம்.
எங்களுக்குக் கிடைத்த தலைவன்போல்
வேறுயாருக்குண்டு?
உளியால் எறிந்தானுமே
உன்னை நோக்கி, ஒரு வெறியன்
உண்மையை உறங்கவைக்க முடியுமா?
நாங்களும் சிரிக்கிறோம்.
காந்தியைக் கொன்றவன்கூடப்
பணிந்தபடியே வந்தானுமே.
எங்களுக்காக நீ சிறிது
எச்சரிக்கையாயிருக்கக் கூடாதா?
உளிவந்த நேரம் நீ மட்டும்
தலையைத் தாழ்த்தியிருக்காவிட்டால்...
அய்யகோ! நினைக்கவே முடியவில்லை.
பொதிகைத் தென்றலைப் புளிக்கச்செய்த
திருவாரூர்த் தென்றலே!
உளியெறிந்த அன்று மாலை
பொதுக்கூட்டத்தில் பேசியோர்
உளியைப் பற்றியே பேச
நீ மட்டும் தமிழகத்தில்
ஏற்றவேண்டிய ஒளிபற்றிப்பேசினாயாமே
உன்னையா கொல்ல நினைத்தான்?
சரித்திரமே!
ஆறுகோடி மக்கள் உயிர் உன் கையில்
அதற்குத்தானவாவது......
உனக்கா புரியாது?

—இரா. நரேந்திர குமார்

அந்த பிப்ரவரி 2

என். எஸ் சம்பந்தம்

வாழ்க்கையில் சிலருக்கு சில நாட்கள் மறக்க முடியாத நாட்களாக இருக்கும் அவை பிறந்த நாட்களாக, திருமணமான நாட்களாக, தாங்கள் போற்றும் தலைவர்களின் பிறந்த நாட்களாக, சில தலைவர்களின் நினைவு நாட்களாக இப்படி பலவகைப்பட்டவைகளாக இருக்கும். ஆனால் சரியாக மூன்று ஆண்டுகளுக்கு ன்பு பிப்ரவரி இரண்டாம் தேதி எங்களை எல்லாம் சென்னை மத்திய சிறையில் மிருகத்தனமாக அடித்த நாள் ஏற்கெனவே முதுகெலும்பில் இருமுறை அறுவை சிகிச்சை செய்யப்பட்ட என்னை, பலரும் சூழ்ந்துகொண்டு மிருகத்தனமாக தாக்கியபோது, என்னைக் காப்பாற்றவந்த தி.க. பொதுச் செயலாளர் திரு. வீரமணி அவர்களை முகத்திலும், சைதை திரு. தட்சிணாமூர்த்தி அவர்களை, கைத்தடி எங்கெங்கு செலுத்த முடியுமோ அப்படியும் அடித்துத் தீர்த்தார்கள்.

ஏற்கெனவே அறுவை சிகிச்சை செய்யப்பட்ட இடத்திலேயே அடித்துவிட்ட காரணத்தால் என் முதுகெலும்பில் இன்னும் சில எலும்புகள் எடுக்கப்பட்டு அதிகம் நடமாட முடியாமல் அதிக நேரம் படுக்கையிலேயே படுத்திருக்க பணிக்கப்பட்டு முடமாகி விட்டேன். திரு. வீரமணி அவர்களுக்கு மூக்கில், ஆயுள் பூராவும் தீராத வலியுடன் இருக்க வேண்டியவராகி விட்டார் திரு. தட்சிணாமூர்த்திக்கு சிறை வாசத்தின் போது ஏற்பட்ட இருதய நோய் தொடர்கதையாக இன்றும் பொது மருத்துவமனையில் படுக்கையில் இருக்க வேண்டியவராக இருக்கிறார். இவ்வளவையும் சொல்லுவதற்கு காரணம், இவற்றையெல்லாம் காட்டி ஓட்டுப் பெறுவதற்காகவோ, தியாகி மானியம் கோருவதற்காகவோ அல்ல. நாங்கள் எல்லாம் இருக்கும் இயக்கம் மனிதாபிமான இயக்கம். மனிதர்களுக்கு எந்த நிலையில், யாரால் கொடுமைகள் நிகழ்த்தப்பட்டாலும் எதிர்க்கும் இயக்கம்

அரசியலில் ஆகட்டும், மற்றத் துறைகளில் ஆகட்டும், இன்று அரசோச்சுபவர்கள் நாளை எதிர்கட்சியாகலாம் இன்று எதிர்க்கட்சியாளர்கள் நாளை அரசோச்சலாம்: இடையே கட்சிகள் கிளர்ச்சிகள் செய்யலாம். தலைவர்களையும் தொண்டர்களையும், ஆள்பவர்கள் சிறையில் வைப்பது உலகெங்கும் நடந்து வரும் வாடிக்கை யாரும் ஆயுள் முழுதும் ஆண்டு கொண்டே இருக்க முடியாது. இப்போது ஆள்பவர்கள் நாளை எதிர்க்கட்சியாக மாறி கிளர்ச்சி செய்து சிறை சென்றால் எங்களை அடித்துக் கொடுமைப் படுத்திய வித்தியாசாகரன்கள் இவர்களையும் அப்படிச் செய்யக்கூடாது என்பதற்காகவே, எங்களைக் கொடுமைப்படுத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோருகிறோமே தவிர என முதுகில் எடுக்கப்பட்டு ஐந்து எலும்புகளும் மீண்டும் முளைத்துவிடும் என்ற நப்பாசையால் அல்ல.

நீதிபதி இஸ்மாயில் கமிஷன் அறிக்கை வந்து ஓராண்டாகி விட்டது. குற்றம் புரிந்தவர்களை தற்காலிக வேலை நீக்கம் செய்துள்ளனர். தற்காலிக வேலை நீக்கம் தண்டனையாகிவிடாது என்பது சர்க்கார் உத்தியோக விதிமுறைகளை அறிந்தவர்கள் அனைவரும் அறிவர்

இனியாவது காலந்தாழ்த்தாது உடனடியாக நடவடிக்கை எடுக்க தமிழக அரசு முன்வருமா?

நன்றி: விடுதலை

★

தீண்டாமை ஒழியுமா?

இந்தத் தலைப்பு மிக மிக விந்தையானது. இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இப்படியொரு தலைப்பில் கட்டுரையா? தீண்டாமை ஒழிப்பைச் சட்டமாக்கிய பிறகும் கூடவா இப்படி ஒரு இழிநிலை இந்திய மண்ணிலே இருக்கின்றது என்ற எண்ணம் எல்லோருக்குமே தோன்றத்தான் செய்யும்

தீண்டாமை இந்த மண்ணிலே இருக்கிறது. அதுவும் தன் கொடுங்கரங்களால் உயர் சாதிக்காரர்களை இழுத்தணைத்துக் கொண்டிருக்கிறது என்பதனை இன்று யாரும், உண்மையாக இருந்தாலும் ஒப்புக் கொள்ளமாட்டார்கள், ஏனெனில் அவர்கள் உள்ளம் அப்படி அவர்கள் வாழும் சூழ்நிலை அப்படி, என்னதான் சட்டம் இயற்றினாலும் என்ன நடந்து விடும் என்ற அலட்சியம் அப்படி!

இந்த நிலையிலேதான் தீண்டாமை ஆல்போல் தழைத்து வேர் விட்டுக் கொண்டிருக்

சமதர்மம் நிலவுமா

கிறது. அதற்குச் சட்டம்தான் காரணம் அதனை அமுல்படுத்துவதில் உள்ள முறைகேடுகள் தான் காரணம் என்பது ஒரு புறம் இருந்தாலும் நம்மை அறியாமலேயே நாமும் ஒரு காரணம் என்பதை நாம் இன்னும் அறியாமல் இருக்கிறோமே என்பதுவும் முக்கியக்காரணமாகும்.

ஏகாதிபத்திய வெறியினரின் பிடியிலிருந்து விடுதலை பெற்ற நாள் முதல் நாம் கூறிக்கொண்டிருப்பதென்ன? மதச்சார்பற்றவர்கள் என்று தான் இன்னமும் சொல்லிக் கொண்டிருக்கிறோம். தீண்டாமை சட்டத்திற்கு முரண

ணது ⁝ ன்படைச்சட்டமாகவும் ஆக்கியிருக்கிறோம். பயன் என்ன?

இன்றைய நிலையில் மதங்கள் வளர்க்கப்படுகிறது. சாதிகள் காப்பாற்றப்படுகின்றன. இந்த நிலையில் மதச்சார்பற்ற நாடு என்று பிதற்றிக் கொள்வதிலே தீண்டாமை ஒழிப்பைச் சட்டமாக்கிய நாடு என்று வீண்பெருமை பேசிக்கொள்வதிலோ என்ன பயன் இருக்க முடியும்.

விடுதலை பெறுவதற்கு முன்பு அதற்கு முன்னாலும் ஒரு நூற்றாண்டுக் காலத்திற்குமுன்பு ஒருவன் எப்படித் தன் பெயருக்குப் பின்னால் சாதிப் பெயரைப் போட்டுக் கொள்வதில் எவ்வளவு முனைப்பாக இருந்தானோ அவ்வளவு முனைப்பையும் அதற்கு மேலாகவும் இன்றைக்குத் தன் பெயருக்குப் பின்னால் தன்னுடைய சாதிப் பெயரைப் போட்டுக் கொள்வதிலே முனைப்பாக இருக்கிறான்

இதனைப் பாமர மக்கள் தான் மேற்கொள்கிறார்கள் என்று சொல்லிவிட முடியாது இதனைப் படித்தவனும் மேற்கொள்ளுகிறான். சட்டத்தை

★★★★★★★★★★

சீவ. நடராசன்

★★★★★★★★★★★

மதிப்பவனும் மேற்கொள்ளுகிறான். தீண்டாமை பற்றி வாய்கிழியப் பறைசாற்றுவதைத் தொழிலாக அவனும் பின்பற்றுகிறான். இவைகளுக்கெல்லாம் மேலாக சாதிகள் இல்லையடி பாப்பா என்று இலக்கியம் பேசுகிறானே அவனும் மேற்கொள்கின்றான்.

இந்நிலையில் தீண்டாமை ஒழியுமா, சாதி உணர்வுகள் தான் பூண்டோடு அழியுமா?

அழியாது ஏன்?

நம்மையாளும் மாநில அரசும், இதனைக் கைப்பிடிக்குள் அடக்கி வைத்திருக்கும் மத்திய அரசும் இதனை ஒருதாழ்த்தப்பட்ட மக்களைக் கவரக் கூடிய போலிச் சக்தியாகக் கருதிக்கொண்டு செயல்படுவதே காரணம்.

இப்போதைய மத்திய அரசுதான் என்று சொல்லி விட முடியாது, இதற்கு முன்னாலே இயங்கிய மத்திய அரசும் இவ்வகையில்தான் செயல்பட்டது. தாழ்த்தப்பட்டவர்கள் பின்தங்கியவர்கள் நிறைந்த இந்த நாட்டில் ஜனநாயகத்தின் பெயர் சொல்லி போலியாகவே செயல்பட்ட ஒருசில மேட்டுக் குடியினரின் ஆதிக்கத்திலே இந்த இந்திய நாடு அடிமைப்பட்ட போது எந்த மத்திய அரசும் மேல் போக்காக போலியாகவரை ஏமாற்றும் விதத்தில்தான் செயல்பட முடியுமே தவிர வேறு எந்த வகையிலும் செயல்பட முடியாது.

இந்தக் காரணத்தினாலே தான் மாநில அரசு கொண்டு வந்த முற்போக்கான திட்டங்களை அது புறக்கணித்துக் கொண்டே வந்தது

தம்மை ஒரு சோசலிசச் சிற்பியெனப் பணியாற்றிய நேருவாலேயே இதனை நிறைவேற்ற முடியவில்லை. குறுகிய காலமே பிரதமராக

(தொடர்ச்சி 9ம் பக்கம்)

ஆர்த்தெழுந்து சூளுரைப்போம்!

கலைஞர்தம் உரைகேட்டுக்
கருத்தினில் பதியவைத்து
நலன் விளக்கும் நம்கழக
நன்றியுள்ள தொண்டர்காள்
உறுதியினைப் பெற்றிலங்கும்
உளம்படைத்த தோழர்காள்
கறுப்புடையை அணிந்துகொண்டு
கவினுறவே ஊர்வலத்தில்
சனவரி இருபத்தாறில்
சாய்ந்தொன்றாய் அணிவகுத்தே
இனமானங் காப்பதற்கே
எழுச்சினைக் காட்டிவிட்டோம்
பொறுப்புடைய நம்தலைவர்
புகன்றுள்ள வாசகத்தை
நிறைவேற்றக் குரலெழுப்பி
நெஞ்சுரத்தைத் தெரிவித்தோம்
இந்தியெனும் அரக்கியினை
இனியதமிழ் நிலத்தைவிட்டு
வந்தவழி தானோட
வளர்தமிழின் குரல் கொடுத்தோம்!
நடுவரசின் பொதுமொழியாய்
நந்தமிழும் இருப்பதற்கே
எடுத்துள்ள நம் முயற்சி
இனிது வெற்றி பெற்றிடுவோம்,
அண்ணாவின் உருவத்தை
அமைத்தகொடி பறக்கவிட்டே
அண்ணாவின் புகழ் அழிக்கும்
ஆள்வோரின சதியழிப்போம்
வன்முறையில் தலைப்பட்டே
வாலாட்டம் காட்டிவரும்
புன்மையாம் நடிகர்கட்சிப்
போக்கினையே புறஞ்சாய்ப்போம்
சூளுரையைச் செய்திடுவோம்
சுந்தரத் தமிழ்காப்போம்
தோளாகித் தீமைசெய்யும்
தீ நடிகர் கட்சியினை
மாற்றிடவே சூளுரைப்போம்
மாவீரர் நம் "கலைஞர்"
ஆற்றல்சால் பணிவெல்ல
ஆர்த்தெழுந்து சூளுரைப்போம்!

—தொண்டன்

தமிழ்த் தாய் அறிக்கை!

கவிஞர் மீனவன்

நிலாப்பால் பருகி நீந்தும் ஆம்பல்
விலாச்சிற(கு) அவிழ்க்கும் வேளை, ஒளிப்புனல்
கீற்றலைப் பொய்கைக் கிண்கிணி கேட்டு
மாற்றொலி கொடாது வரிவண் டுறங்கும்.

கண்ணிமை சார்த்தியும் எண்ணம் பிதுங்கவே
புண்ணுறக் கட்டிலில் புரண்டேன் தோணிபோல்
பத்தரை மாற்றுப் பசும்பொன் வடித்த
சித்திரத் தேர்போல் சேயிழை யொருத்தி
புன்னை யரும்புப் புன்னகை யிழைத்தே
மின்னெழில் காட்டி என்னையழைத்தாள்.

நெய்ப்படு கடுகொத்து 'நீ யார்?' என்றேன்.
செவ்வாய்த் திறந்து தேன்மொழி வார்த்துக்
'குழல் இசை எழுப்புமுன் குரல்வளை எழுப்பி
எழும் அணுத் திரள்ஒலி எழுத்துப் படைத்தவள்;
மூச்சுக் காற்றெழு மூங்கையர் நாவினில்
பேச்சுக் காற்றுறப் பிறந்தவள் முதலில்
பல்வளம் பெருக்கும் பஃறுளி யாடி
செல்முகில் குமரியின் செழுமலர்ச் சூடி
செய்யுள் புலவரின் செந்நா வருடி
நெய்தல்முன் நீர்விழா நெடியோன் மணிமுடி
சீறடி பயிலச் செங்கோல் நடாத்தி
ஈறிலா(து) உலவும் இயற்கை மொழிமகள்
யானே;" என்றாள் "யாய்! யாய் ! தமிழ்த்தாய்!
யானோ நின்மகன்? யாதுபணி? என்றேன்
"என்றன் வாழ்க்கை இருளுமோ?" என்றாள்.
"தென்றலை நெருப்புத்தின்றுபுகை விடுமா?"
என்றேன், சிரித்தாள் "என்வர லாறு
துன்ப எதிர்ப்பே. சொல்வேன் கேளாய்!

தனித்தமிழ் ஆட்சிக் கனிவளர் சோலை
பனிப்புயல் படர்தாங்கு பாலிபா கதப்பெண்
களப்பிரர் படையொடு காரிருள் புகுத்தினர்.
உளங்குலைந் தொடுங்கினேன் உருத்திரிந் திங்கே
தாழ்ந்துமுன் புகுந்த சமற்கிரு தப்பெண்
பாழ்வினை பயின்றனள் பாங்கியர் தொடர்பால்

எருக்கம்பூ மொழியினர் எனதணி கலன்களை
நெருப்பினுள் நீரினுள் நெடிது மறைத்துக்
கதைகள் கட்டினர்; கருத்தில்நஞ் சேற்றினர்.
புதுவிதி காட்டினர் புதல்வியைப் பிரித்தனர்
திணிபழி நோய்க்கும் செந்நீர் வெள்ளை
யனுவெனக் கிளர்ந்தே அனைத்தையும் எதிர்த்தேன்.

பல்லவன் எழுந்தான் அல்லல் நீங்கினேன்
வல்லவன் பாண்டியன் வாழ்வெனக் கீந்தான்
சோழன் நிமிர்ந்தான் சுடரணி புனைந்தேன்.
வாழ விடோம் என வஞ்சகி யர்பினும்
பணிபுரி வார்போல் பழகியென் மீது
மணிப்பிர வாள மயக்கூசி குத்தினர்.
சோனகப் பெண்ணும் தொல்லை கொடுத்து
மேனி தழும்புற மேவினள் தொடர்ந்தே.
பறங்கிப் பெண்ணும் பதிந்தனள் கொடுமை
இறங்கினேன். எனினும் என்வளர்ச் சிக்கவன்
புதுப்பணி தந்தனன்; பொறுத்தேன், விடுதலைக்
கதிரவன் எழுந்தான் களித்தேன். தனித்தமிழ்
இயக்கமும் பெற்றேன். நயப்பிலாள் இந்தியும்
வியப்புறப் புகுந்தனர் வெறியன் இட்லரின்
நாசப் படைகளை நசுக்கி விரட்டிய
மாசில் செம்படை வரலாற்று வெற்றிபோல்

செந்தீக் குளித்தும் திருப்போர் நடாத்தியும்
இந்தியை எதிர்த்தேன். எய்தினேன் வெற்றி"
என்றாள் மறைந்தாள். எழுந்து
நன்றுகண் தேய்த்து நான்திகைந்தேனே.

மலேசியத் திருநாட்டில்

நந்தமிழ்க் கலை வளர்க்கும் செந்தமிழ்க் கலா நிலையம்

மலையகத் திரு நாட்டில் செந்தமிழர்களின் சொந்தக் கலைகளெனப் போற்றிப் புகழப்படும் அனைத்துக்கலைகளையும் போற்றி வளர்த்துக் காத்து வரும் தாயமைப்பாகத்திகழ்ந்திடுகின்றது செந்தமிழ்க் கலா நிலையம்.

அண்மையில் தமிழகத்திற்கு வருகைதந்து தமிழ் மணம் தெளித்து – தமிழ்த் தென்றல் வீசச் செய்து தமிழொளியைப் பரவச் செய்த மூதறிஞர் இராமதாச அடிகளாரின் அருமுயற்சியால் தொடங்கப் பெற்றதுதான் இந்தச் செந்தமிழ்க் கலா நிலையம்.

மலேசிய சிங்கப்பூர் மக்களின் குறிப்பாகத் தமிழர்களின் மனமெல்லாம் நிறைந்திருக்கின்ற அமைப்பாக இந்த நிறுவனம் பொலிந்து வருகின்றது.

செந்தமிழ்க் கலா நிலையத்தின் நெடுநாள் செயலாளர் செந்தமிழ்ப் புலவர் மாமணி கே. சுப்ரமணியம் அவர்கள் தமது துணைவியாரோடு தமிழகத்திற்கு வருகை தந்திருக்கின்றார்

அவர் வாயிலாக செந்தமிழ்க் கலா நிலையத்தின் பிறப்பு—வளர்ப்பு...செழிப்பு-

சிறப்புகளை அறிந்தபோது தாயகத்திலும் இப்படிப்பட்டதோர் அமைப்பில்லையே என்ற ஏக்கம் தான் இதயத்தில் எழுந்தது.

"1936-ம் ஆண்டு சுவாமி இராமதாசர் அவர்களின் தமிழ்ப் பணி காரணமாக

மணிமொழி

தோற்றுவிக்கப்பட்டது தான் செந்தமிழ்க் கலா நிலையம்.

துவக்கத்தில் வெள்ளைக்காரர்களின் துணையோடு பினாங்கில் தமிழ்ப் பள்ளியொன்று துவக்கப்பட்டது.

ஆனால் இப்போது இந்த செந்தமிழ்க் கலா நிலையத்தில் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட பிள்ளைகள் படிக்கின்ற அளவுக்கு இது வளர்ந்திருக்கின்றது

கல்வி புகட்டுவது மட்டுமின்றி–பொது நலத் தொண்டு–சமூகச் சீர்திருப் பணிகள் போன்ற பெரும் பணிகளை இந்த அமைப்பிலுள்ளவர்கள் மேற்கொள்வதோடு தமிழ் மரபு மிளிரும் பல்வேறு கலைகளும் பயிற்றுவிக்கப்படுகின்றன

சிறப்பாகப் பழந்தமிழர்களின் வீர விளையாட்டான சிலம்பக் கலை இங்கு இளைஞர்களுக்குக்கற்றுத் தரப்படுகின்றது

"சிலம்பக் கலை மன்றம்" என்ற அமைப்பு இந்தப் பணியில் தீவிரமாக இறங்கியுள்ளது இக்கலையைப் பயிற்றுவித்து வரும் இராமதாசருக்கு "சிலம்பக் கலை போதகர்" எனும் பட்டமே வழங்கப்பட்டுள்ளது.

இசைத் தமிழ்ப் பயிற்சி—இலக்கிய—இலக்கணப் பயிற்சி–போன்ற பயிற்சிகளும் அளிக்கப்பட்டு ஏராளமான நல் மாணவர்கள் உருவாகி மேலும் உருவாக்கப் பட்டும் வருகின்றனர்

மலேசியர்கள் "சீலட்" எனும் தற்காப்புக் கலையையும் அதே போல சீனர்கள் ஒரு வகையான தற்காப்புக் கலையையும் கற்றுத் தேர்ந்து வைத்திருட்பதுபோல தமிழர்களுக்காக சிலம்பக் கலையை வளர்த்து வருகிறோம்.

சுருள் கத்தி வீச்சு...தீப்பந்தம் எறிதல் சில பயிற்சிகளின் மூலம் நரம்புகளை இழுத்துப் பிடித்து சக்தியை ஒருமுகப்படுத்தித் தாக்கும் கலை போன்றவைகளில்பயிற்சி தரப்படுகின்றன.

இராமதாச அடிகள் மட்டும் இல்லையென்றால் சிலம்பக் கலையே சீரழிந்து போய் விட்டிருக்குமோ என்ற எண்ணம்தான் தமிழர்களின் உள்ளத்தில் எழுகின்றது.

இப்படிப்பட்ட வீரச் செயல்கள்—அறிவுணர்ச்சிப் பணிகள் ஆகியவற்றை வளர்த்து வருவதால் அதன் மூலம் சமூகத் தொண்டு புரிந்து வருவதால் மலேசிய அரசே முன் வந்து ஒன்றேகால் ஏக்கர் நிலத்தை செந்தமிழ்க் கலா நிலையத்திற்கெனக் கட்டிடம் கட்டிக் கொள்ள வழங்கியிருக்கிறது என்று பெருமைப் பட்டார் புலவர் மாமணி அவர்கள்.

இராமதாச அடிகளார் மலேசியாவிலுள்ள பிற்பட்ட மக்களின் எழுச்சிக்காக–ஏற்றத்திற்காக அயராது பாடு பட்டு வருகின்றவராவார்.

அங்குள்ள ஒரு கோயிலில் 'பிற்படுத்தப்பட்ட மக்கள் செல்லக் கூடாது என்று தடை விதித்திருந்த நிலையில் அடிகளார் அம்மக்களோடு ஆலயப் பிரவேசம் செய்து தாமே பூசை நடத்தி புரட்சிகரமான காரியத்தைச் செய்து காட்டிய பெரியாராகத் திகழ்கிறார்.

மொழி — கலை—பண்பாட்டுப் பணிகள் மட்டுமின்றி—இழிநிலைக்கு ஆளாக்கப்பட்ட மக்களின் ஏற்றத்திற்காகவும் இந்நிலையம் அடிகளார் தலைமையில் இயங்கி வருகின்றது.

பினாங்கில் தலைமையகமும் காலாலம்பூர் சென்னை போன்ற டங்களில் கிளை அமைப்புகளும் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன.

அடிகளார் நயக்கும் தமிழன்பர்களே இந்நிலையங்களின் காப்பாளராக அமைந்து செவ்வனே செயல்படுகின்றனர்

தலைமையகத்தின் செயலாளராகக்கடந்த பதினைந்து ஆண்டு காலமாக அயராது பணியாற்றியவரும் அடிகளாரின் அணுக்கச் சீடர் புலவர் மாமணி வீ. கே. சுப்பிரமணியம் அவர்கள் வடமலாயா தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயலாளராக 1960 ல் தேர்ந்தெடுக்கப்பட்டு இன்றுவரை பணியாற்றி வருகின்றார். அதே போல மலேசிய தமிழ் எழுத்தாளர் சங்கத்திலும் குறிப்பிடத்தக்க இடம் பெற்றிருக்கிறார்

எண்ணற்ற இலக்கியங்களைப் படைக்கும் பேராற்றல் கொண்ட புலவர் மாமணி—"திருக்குறளில் ஒரு குறள்" 'திருவள்ளுவர் மாட்சி—"தமிழர் திருவிழா" போன்ற ஆராய்ச்சி நூல்களையும்—வேறு பல கவிதை—கட்டுரை நாடக நூல்களையும் படைத்திருக்கின்றார்.

'திருக்குறளில் ஒரு குறள்" நூலுக்கு கலைஞரின் மதிப்புரையைப் பெற்றுப் போக வேண்டும் என்ற பேரவா எனக்கு இருக்கிறது" என்ற புலவர் மாமணி – 'கலைஞர் எழுத்துக்களைப் படிப்பதில் பேரார்வம்காட்டிடும் பெருங்கூட்டம் மலேசியாவில் இருக்கின்றது. கலைஞரின் கடிதங்களோ—பேச்சுக்களோ இங்குள்ள ஏடுகள் வெளியிட்டு அந்நாட்டு மக்களின் வேட்கையைத் தணிக்கின்றன. அந்த அளவுக்கு கலைஞருக்கு மலேசிய நாட்டில் மரியாதை இருக்கின்றது அந்நாட் மக்கள் கலைஞர் மீது பெரு மதிப்பும் பேரன்பும் வைத்துருக்கின்றனர்'. என்ற தகவலையும் தெரிவித்தார்.

தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு புலவர்களையும் பல்துறை அறிஞர்களையும் சந்திக்க சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் புலவர் மாமணி வீ. கே. சு. அவர்கள் இம்மாதம் 29ம் நாள் தாயகம் திரும்புகிறார். அவரது சுற்றுப் பயணம் வெற்றிபெற வாழ்த்துவோமாக—தமிழ் போல் அவர் வாழ்க தழைத்து!

★

உளியினைத் தீட்டும் உதிர்ந்த இலைகள்

நிதியுயிர் பறிக்க எண்ணும் நீசரே உமக்குச் சொல்வேன்
விதியுடன் விளையா டாதீர் வீழ்ந்திடும் பரங்கி மலையே
கதிரினை வீழ்த்த உம்மாற் கட்டாயம் முடியு மோதான்
கதிரதன் ஒளியைக் கவரக் கனவினைக் காணு கின்றீர்!
மதியினை ஒளியை வீழ்த்த
மனப்பாலைக் குடிக்கின் றீர்கள்
சதியினல் சிக்கி உழன்று செத்திடுந் தமிழர் தங்கள்
விதியென விளங்கு வோனை வீழ்த்திடத் துடிக்கும் பேடி!
அதிரசம் இட்லி தோசை அப்பமா கலைஞர் உயிர்தான்!
மதிப்பிட முடியா தந்த மாண்பினைக் கொன்று குருதி
நதியினைத் தேச்க நாட்டில் நாசத்தை விளைத்தி டாதீர்
பொதியெனப் பிணத்தின் குவியல்
போட்டிடச் செய்திடாதீர்
சதிசெய்து வாழ நினைத்தாற்
சவக்குழி தானே வாய்க்கும்!
கதியெனத் தமிழர்க் குள்ள
கலைஞரைத் தீர்த்து விட்டால்
கதிவேறு தமிழர்க் கில்லை கட்டாயம் தவிப்ப ரன்றே
மதியினைத் தீட்டு மென்றார் மாமேதை அறிஞ ரண்ணா
உதிர்ந்திட்ட இலைக ளெல்லாம் உளியினைத் தீட்டு கின்றார்!
கலைஞரின் உயிரைத் தேடுங் கதியிலா மூடா நீகேள்
அளவிலாத் தொண்ட ரிடந்தான் அவருயிர் இருக்குதப்பா
கலைஞரின் உயிர்க்குப் பதிலாய்க்
கணக்கிலா தெமது உயிரை
விலையாய்த் தருவோம் பெறுவாய்
விட்டிடு அவர்தம் உயிரை!
அலையினை அழிக்க எண்ணும்
அறிவில்லா மூடனே கேள்
உலையினைத் தட்டி விட்டால்
உயிரெலாங் கொதிக்கு மன்றோ
தலையினை வெட்டி விட்டால் தமிழகம் முண்ட மன்றோ
குலையினை மாலை யாக்கிக் கொள்ளுவோம்
நினைவில் வைப்பாய்

—புலவர் வெற்றியழகன்

தமிழ்நாடு மேற்கு — மத்திய
பட்டதாரிகள் தொகுதி மேலவைத் தேர்தல்!

கழக ஆதரவு பெற்ற வேட்பாளர்
தலைமைக் கழக அறிவிப்பு

கோவை – நீலகிரி – தருமபுரி - சேலம் ஆகிய மாவட்டங்கள் அடங்கிய மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்ற மேலவைக்கு ஓர் உறுப்பினர் தேர்ந்தெடுப்பதற்காக 1979 மார்ச் 3ம் நாளன்று நடைபெறவிருக்கும் தேர்தலில் வேட்பாளர் திரு கே. கே. அப்துல் சமது பி. எஸ். சி. அவர்களுக்குத் திராவிட முன்னேற்றக்கழகம் ஆதரவு அளிக்கிறது.

கோவை— நீலகிரி— தருமபுரி – சேலம் மாவட்டங்களிலுள்ள பட்டதாரி தொகுதியின் வாக்காளர்களான கழக உறுப்பினர்களும், ஆதரவாளர்களும், மற்றும் அந்தந்த மாவட்டத்திலுள்ள கழக அமைப்புகளின் நிர்வாகிகளும் தோழர்களும் திரு. கே கே. அப்துல்சமது பி.எஸ்.சி. அவர்களுக்கு வாக்களித்தும் வாக்குகளை சேகரித்துக் கொடுத்தும் வெற்றிக்கு உறுதுணையாக செயல்படுமாறு தலைமைக் கழகம் அன்போடு கேட்டுக் கொள்கிறது

க. அன்பழகன்
பொதுச் செயலாளர் தி. மு. க.

'அறிவகம்' சென்னை – 18
5 2 1979.

தொலைபேசி எண் கடை: 33213 இல்லம் 31922
நாம்நாடுவோர்தவறாமல் நாடுவது
தமிழக எண்ணெய்ப் பலகாரம்
தயாரிப்பு விற்பனை நிலையம்
92, திருப்பரங்குன்றம் சாலை மதுரை
தனிச்சிறப்பு: சிலேபி, தெக்கத்திமிட்டாய், அதிரசம், இனிப்புசேவ, பக்கவடா, மிக்சர், முறுக்கு, கடலை நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்

உரிமையாளர்
பே. தேவசகாயம்
கிளைகள்: 26, மேலமாசி வீதி, 70, சுவாமி சன்னதி
12, அழகர்கோவில் சாலை, 72 டவுன்ஹால்ரோடு, மதுரை.

நீர்க்குடும்பம்

ஈரமுள்ள இடத்தில்தான் ஈகையுண்டாம் காவிரி
தீரமுள்ள இவ்விடத்தில் ஈரமுண்டு ஈதலுண்டு
இசைபட வாழ்தலுண்டாம்
நீர்க்குடும்பம் எனும் தலைப்பில்
நெடிய புகழ் கவிமக்கள் பாடுகின்றார்;
நீர். குடும்பத்தின் உறவன்றே எனச்சொல்லி
நீர் எழுத்துக் கவியெழுதும் எனைப்பிடித்து — அணி
சீர் எழுத்துப் புலவரிடை நிறுத்திவிட்டார்.
கார் எழுத்து மழையாகும் மழையின்
பார் எழுத்து ஆறுதம் ஆற்றின்
நேர் எழுத்தே குளமென்போம் கிணறென்போம்'
இதற்கெல்லாம்
வேர் எழுத்துக் கடலென்பார் தலையில்
யார் எழுத்து என நைவார் விடுவார் கண்ணீர்
பார்; எழுத்தை மாற்றுகின்றேன் எனச்சொல்வார்;
வியர்வைப்
போர் எழுத்தால் விதியை வெல்வார்,
வானக் கிழவன் இருமுதலே இடியென்றும்
வாடிப் பிதுங்கும் அவன்
கண்ணொளியே மின்னலென்றும் அவன்
வடிக்கின்ற கோழை எச்சில்தான் மழையே என்றும்
வர்ணித்தால் நோய் மழையை வரவேற்க ஒப்போம்;
வாலிபர்க்குப் பிடித்தமான உவமை சொல்வேன்;
வானத்து மீன் பெண்கள்: கூட்டுப் பேச்சே
இடிக்குமுறல்; அவர்
வாளொத்த கண்வீச்சே மின்னல் கீற்று;
வட்டமதிக் காதலன்மேல் தெளிக்கின்ற
பன்னீரே மழைத் துளியாம்
வீரர்க்குப் பொருத்தமான உவமையெனில்
இருவீரர் நெஞ்சங்கள் மோதுவதே இடிமுழக்கம்
பெருவீரர் வேல் உராய்தல் விண்ணின் மின்னல்
பலவீரர் பொழியும் செந்நீர் மழையே யாகும்
பொதுவில் வானகமே போர்க் களமாம்
போர்க்களமெனினும், போகக்களமெனினும்
பொல்லா நோய்க்களமெனினும் — உழவின்
நல்லார், மழை தரும் வானத்தை
'மானம்' என்றார் கொச்சையாக! பொருத்தந்தானே?
மழையில் நாம் நனைந்தது போதும்
கடலருகே வந்திடுவோம்.
கடலென்றால் வைணவர்க்குத் திருமால்
பள்ளிகொண்ட நினைவே தோன்றும.
உடலெங்கும் நீறுபூசுஞ் சைவர்க்குச்
சிவன் நஞ்சுண்ட கதைதான் தோன்றும்.
படைகொண்டு அழிக்கவொண்ணாப் பூம்புகாரைக் கடல்
தடையின்றி அழித்துவிட்ட வரலாறே நமக்குத் தோன்றும்;
இத்தனையும் கூட்டிக் கழித்தால் இன்னும்
எத்தனையோ நன்மைகளும் கடலால் உண்டாம்
முத்தனைய பற்கள் என்று — கரும்புச்
சத்தனைய பெண் பேச்சுப் பேசுதற்கு
முத்தினையே தந்ததுவும் கடலே அன்றோ!
நிலமடந்தை உடுத்துகின்ற நீலப்பட்டாடை பருவ
நிலாப் பெண்ணைத் தழுவுதற்கு அலைக்கரந் தூக்கும்.
நெடுந்தோளன், நீலவண்ண ஆணழகன்,
குலவுகின்ற காதலர்க்குக் கடலோரம் மணல்மெத்தை
உலவுகின்ற கவிஞர்க்குக் கற்பனைப் பரிசுக் கத்தை.
கும்மிருட்டு மதியோர்க்குக் கரையோரம்
தெரிவதெல்லாம் நண்டு நத்தை; கொட்டில்
தும்பிட்ட மாடுகள்போல் நாவாய்கள் நிற்கும்
துறைமுகத்தைக்
கரீண்பதுவும் களிப்பதுவும் கடலால் அன்றோ!
கான்யூட் மன்னனது கர்வமடக்கியதால் பெருமையுற்று
காந்தி மகான் உப்புக் காய்ச்சியதால் அருமை பெற்று,
வாஸ்கோடீ
காமாவின் கலங்களுக்கு வழியும் விட்டு, வாணிபத்தில்
கடல் கடந்த தமிழருக்கு முதல் வரலாறீந்து
பரந்த மனம் என்பதற்கு உவமையாகி

பல காலம் அசைந்தாடும் ஊமையாகி,
சில காலம் ஊழியாகி, உலகிற்குத் தீமையாகிப் பின்
சினம் அடக்கும் துறவிபோல ஆமையாகிச்
சிறும் அலை சுருக்கிக் கொள்வாய்; கடலே நின்
சீரெல்லாம் சிறப்பெல்லாம் சொல்லப் போமோ? அதனாலே
கடல்கடந்து ஆறடைவோம் வந்திடுவீர்

மழையிடை வந்து மலையிடை தழுவி
இழை இடை வந்த பொன்துகில் போலத் தாழந்
தழையிடை வந்து தலையினை நீட்டும் மடலதுபோல மாதர்
குழலிடை வந்து கோலம் காட்டும் வகிடதுபோலக்
களிநடை பூண்டு காவினில் சென்று காவிரியானாய்
அணிமணி பூண்ட பெண்ணே யானாய்! பெண்ணே என்றார்
பெண்ணை என்றார்; நீ
கைவைத்த இடமெல்லாம் களி நடமாடுவதால்
வைகை என்றார்
வளங் கொழிக்கச் சிந்து பாடுகின்றார்
கோதாவரி யில்லை தமிழ் நாட்டில்
கோதாய் வரியில்லை தமிழ்நாட்டில்! புஞ்சைக்குக்
கோதாவரியில்லை தமிழ்நாட்டில்
வெளிநாட்டுத் தமிழர்க்கு; வாழ்வு
கொள் இடமுண்டு; வரையறுத்துச் செய்கின்றோம்.
வணங்குகின்றோம்... ஆறே நீ வாழ்க நன்று.
ஆறு தலைப்பென்றே எனையழைத்தார் இங்கு
ஏழு தலைப்பெழுதிப் பாடச் சொன்னார்; பாடுகின்றேன்
அடுத்துக் கிணற்றுக்குச் சென்றிடுவோம்.
நான் கப்பூரின் கிணற்றுத் தவளை — ஆனாலும்
நாட்டு வளப்பமறிவேன் — நும்போல்
பாட்டு வளப்பமறியேன் அய்யா!

கருணாநிதி

நெடுவானம் மழைதர மறுத்துவிட்டால்
நீளாறு, குளம், குட்டை, வறண்டுபோய் வாடிவிட்டால்
தாகம் போக்க
ஒருகுவளை தண்ணீரும் இல்லாமற் போய்விட்டால்
உமிழ்நீரை உள்ளுக்குள் விழுங்குதல் போல்
உரக்கேணி ஊற்றுக்கேணி
ஆழக்கேணி ஆற்றுக்கேணி
உடனடியாய்த் தோண்டுகின்றோம்.
கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது என்பாரே
அதன் பொருள் என்ன புரிகிறதா?
கிணறுவெட்ட 'மண்'குவியும் — ஒரு பூதம்
பூமிக்குள் அடைந்திருந்த 'காற்று'
வெளிக் கிளம்பும் — மறுபூதம்
பொங்கிவரும் புது 'நீர்' — அடுத்த பூதம்
பொலிவுமிகு 'வான்' தெரியும் நீர் மீது நாலாம் பூதம்
புவியாளும் ஆதவனின் 'தீ'க் கதிரால் அந்நீரும்
தூய்மையாகும்
— ஐந்தாம் பூதம்
இந்தப்
பஞ்சபூதம் வருவதைத்தான் பழையவர்கள் அழகாய்ச்
சொன்னார்;
அறிவுப் பஞ்சைகளோ அலறுகின்றார் பூதமென்று!
குளம் உண்டு ஊருக்கு அழகாக
எனக்குளம் உண்டு கவிபாடுவதில்; பொதுப்பணி
யாற்றுவதில்

எனக்கு உளம் உண்டு
மரைக்குளம் பேர் எழிலே — தா
மரைக்குளம் பேர் எழிலே!
மறைக்குளம் திருக்குறளே
மறைக்கு உளம் திருக்குறளே!
தீர்த்தக்குளம்... பாவம்
தீர்த்தகுளம் பல உண்டு; அதிற் சில உயிர்
தீர்த்த குளம் உண்டு
நீச்சல் குளம் நகர்ப்புறத்தில் — இன்னும்
நீசற்குளம் சிற்றூரில் இருக்கலாமா?
கொள்மடையும் வடிமடையும் குளத்திற்குத்தேவை - அறிவு
கொள்மடையும் அன்பு வடிமடையும் உளத்திற்குத் தேவை
எக்குளத்திற்கும் படித்துறைக் கல் வேண்டும்!
எஃகு உளத்திற்கும் படித்து உரைகல் வேண்டும்.
"அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர் — அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவார் உறவு"
என்று பாடிக் குளம் விட்டுக் கரையேறுகின்றேன்.
கடல் பெரிது காசினியில்
மழை இனிது மன்பதைக்கே
ஆற்றின் புகழ், மிகையாகும் அவனியிலே
கிணற்றிற்கும் கீர்த்தி பல உண்டென்போமே
குளமெல்லாம் குவலயத்தின் அமுதவாய்கள்; எல்லாம் சரி
இத்தனைக்கும் முகில் கூட்டம் கண்ணீர் வடித்தால் அன்றோ
மழையாகிக் கடல் பொங்கும்
ஆறு ஓடும் கேணி ஊறும் குளம் நிரம்பும்
காரிருள் ஏன் தொலைந்தது?
கனவின்பம் ஏன் கலைந்ததென்று
காலை மலர் வடிக்கும் கண்ணீர்ப் பனித்துளியாம்; தென்னம்
பாளை வடிக்கும் கண்ணீர்தான் மதுச்சாறு
வாழை வடிக்கும் கண்ணீரே பால் ஆகும்
ஏழை வடிக்கும் கண்ணீரோ வேல் ஆகும் வாள் ஆகும்
'அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை'
எனக் கூறி, வியர்வைக்கு விரைந்திடுவோம்
சிப்பியின் வியர்வையிலே முத்துப் பிறக்கும் - ஒரு
சிற்பியின் வியர்வையிலே சிலை பிறக்கும்.
உழவனின் வியர்வையிலே பசி பறக்கும் — ஒரு
மழவனின் வியர்வையிலே பகைபறக்கும்
வலியோர்கள் வியர்வையெல்லாம் பன்னீராம் மிக
எளியோர்கள் வியர்வையெல்லாம் செந்நீராம்
உலைக்களத்தில், கொட்டுகின்ற வியர்வை தனைத்
தழல் உறிஞ்சும் — காதற்
கலைக் களத்தில் கொட்டுகின்ற
வியர்வையெலாம் சந்தனமாம் சவ்வாதாம்
அதனை வியர்வை யென்றால் இலக்கியங்கள் ஒவ்வாதாம்
அதனால் அது சவ்வாதாம்; இப்படி
விரிந்த கடல் முதலாய் வியர்வைக்குளம் வரையில்
செறிந்திடும் வர்ணனை செய்திடக் கவிஞர்
சிறப்புடன் இங்கே இருந்திடும்போது
நானே அதிகம் பாடுதல் நன்றா?
தேனே கனியே தினையே அமுதே
ஊனே உயிரே தமிழே தாயே
வணக்கம் சொன்னேன் வாழ்க நன்று!

(28-9-68 அன்று பரமத்திவேலூர் கண்டர் கல்லூரிக் கவியரங்கத்தில் கலைஞர் பாடிய தலைமைக் கவிதை)

தமிழகத்தை இருள் சூழாதிருக்க...!

நெல்லை மாவட்டத்தில் மக்களின் எழுச்சி மிகுந்த வரவேற்பைப் பெற்றவாறு சுற்றுப் பயணம் செய்து கழகத் தலைவர் கலைஞர் கடந்த ஜனவரி 31 அன்று ராதாபுரத்தில் திட்டமிட்டுத் தாக்கப்பட்ட செய்தி பெரும் வேதனை தருவதாகும்,

செய்தி கேட்டு அதிர்ச்சியும், வேதனையும் அடையாதவர்கள் இல்லை. எப்படியோ தமிழ் இனத்தின் காவலர் தப்பினார் என் பதிலே ஒரு ஆறுதல்,

எப்படியோ கலைஞர் தலை தப்பிவிட்டது ஆனால் அந்த ஒருக்கணம் அவர் தலைகுனிந்திருக்கா விட்டால்... என்னால் நினைக்கவே முடிய வில்லை தமிழகத்திற்கே தலை குனிவுதான், ஒரு பெருமை மிக்க இனத்தின் வரலாற்றில் இருள் கவித்திருக்கும் திக்கற்ற மக்கள் தறிகெட்டு நெறிகெட்டுச் செயல்படும். நிலை பிறந்திருக்கலாம். எப்படியோ அந்த நிலை இல்லை என்பதிலே ஆறுதல்தான்.

ஆனால் இப்படிப்பட்ட தாக்குதல் ஏன் நிகழ்ந்தது? எப்படி உருவாயிற்று? எனும் கேள்வி இன்று எழுந்துள்ளது

இந்த அளவு இடம் பார்த்து திட்டமிட்டு தாக்க ஏதுவான பின்னணி என்ன? என்பதை காவல்துறை தான் கண்டறிய வேண்டும். ஆனால் இன்றைய ஆட்சியில் கடமை உணர்வெல்லாம் எப்படி மங்கிப்போய் உள்ளது என்பதும், மாறாக எப்படியெல்லாம் உண்மை வெளிப்படாமல் மறைக்கப்படுகிறது என்பதும் நாடு அறியும்.

கடந்த ஓராண்டாகவே திங்கள் தவறாமல் வன்முறை செயல்கள் ஆளும் கட்சியினராலே, அவர்களால் ஏவப்பட்டவர்களாலோ நடைபெற்று வருகின்றன.

மதுரை மாணவன் இளஞ்செழியன்மீது திட்டமிட்டு தாக்குதல் நடைபெற்று அவன்உயிர் பறிக்கப்பட்டது. அந்தக் கொடுமையை விளைவித்தவர்கள் மீது சட்டம் பாயவில்லை. பதுங்குகிறது

நாகை நாடாளுமன்ற உறுப்பினர் முருகையன் படுகொலை நாடறிந்த நிகழ்ச்சி அதுபற்றி காவல் துறை நடந்துகொள்ளும் முறையிலும் சட்டம் காப்பாற்றப்படுகிறது என்று கூற முடியவில்லை

பொது வாழ்வில் ஈடுபட்டவர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்ற நிலை இன்று தமிழ் நாட்டில் இடம் பெற்று விட்டது என்றால், சட்டம் ஒழுங்கு அமைதி காப்பாற்றப்படுகிறதா? நீதி நிலை பெறுமா? என்பதை ஆட்சியாளர் எண்ணிப் பார்த்துக் கொள்ளட்டும். தாக்குதல் முறைதான் இன்றைய ஜனநாயக முறை என்று ஆகிவிட்டால் பின்னர் நாடு காடாகும். இந்த நிலை வளர வேண்டுமா? என்பதை எண்ணிப் பார்த்து முறையான நடவடிக்கையை அரசு மேற்கொள்கிறதா என்பதையே நாடு எதிர் நோக்கியுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுச்செயலாளர்
பேராசிரியர் அறிக்கை

பொய்யிலே பிறந்து... பொய்யிலே வளர்ந்த...

'ஒரு மனிதன் பிறருக்கு வேண்டுமானல் மூட்டை மூட்டையாக அறிவுரைகளை இலவசமாக வழங்குவான். ஆனல் தான் மட்டும் அதிலிருந்து எதையும் எடுத்துக் கொள்ளமாட்டான்?'

— ஒரு புகழ்பெற்ற எழுத்தாளரின் இந்த வாக்கியங்களைப் படிக்கும்போது நமக்கு நடிக முதல்வரும் அவருடைய 'ஆமாம்சாமி' அமைச்சர்களும்தான் நினைவுக்கு வருகின்றனர்.

அண்ணா சதுக்கத்தில் எம். ஜி. ஆர். எடுத்துக்கொண்ட உறுதி மொழிகளைப் படிப்பவர்கள். 'ஆகா... இவரைப் போல ஒரு நேர்மையாளரையும் பொய் பேசாதவரையும், விளக்கு வைத்துத் தேடினலும் பார்க்க முடியாது...' என நினைத்து வியப்படையக் கூடும்.

நிதி தருகிறேன் என்று சொல்லிவிட்டு கடைசி வரை தராமல் போன 'கொடுத்துக் கொடுத்துக் கரம் சிவந்த' வள்ளலின் பழைய கதைகளை யாரும் மறந்திருக்க முடியாது.

அவர் சொன்ன நிதியைக் கொடுக்காமல் போனது ஒரு புறம் இருக்கட்டும்; கைநீட்டிக் காசு வாங்கிவிட்டு அவர் தராத 'கால்ஷீட்' களுக்கென்றே ஒரு தனிக்கதை இருக்கிறது. மாடி வீட்டில் வாழ்ந்த எத்தனையோ பணக்காரர்கள் எம். ஜி ஆரை நம்பிப் படமெடுக்கத் துவங்கி, 'கால்ஷீட்' தகராறின் காரணமாக 'நடுத்தெரு நாராயணன்களாக' மடிந்த துயரக் கதைகளுக்கும் ஒரு முடிவில்லை.

அண்ணா பெயரைச் சொல்லி கட்சி நடத்தி அண்ணாவின் கொள்கைகளையெல்லாம் ஆழக் குழி தோண்டிப் புதைத்து விட்ட எம். ஜி. ஆருக்கு உறுதி மொழிகள் ஒரு கேடா? அடேயப்பா... அவர் எடுத்துக் கொண்ட உறுதி மொழிகள்தான் எப்பேர்ப்பட்டவைகள்...!

எடுத்துக் காட்டிற்கு ஒன்றைக் கேளுங்களேன்:

" மதுவிலக்குக் கொள்கை வெற்றி பெறப் பாடுபடுவேன் "

—கள்ளச் சாராய ஆறுகப் பெருகியோடும் சென்னை மாநகரில், கள்ளச் சாராய விற்பனையின் மொத்தகுத்தகை எடுத்திருக்கும் மாவீரன்'களைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு இப்படிப்பட்ட ஒரு உறுதி மொழியை எடுக்க யாரால் முடியும்?

'குருவை மிஞ்சிய சீடர்களை' அரசியலில் காண்பதொன்றும் ஆச்சரியமான நிகழ்ச்சியல்ல என்றாலும்—

பொய் பேசுவதில் குருவையே 'தூக்கிச் சாப்பிடும்' அ. தி. மு. க. சீடக் கோடிகளுக்கு இணையானவர்களை வேறு எந்தக் கட்சியிலும் 'பூதகண்ணாடி' வைத்துத் தேடினலும் பார்க்க முடியாது.

சிதம்பரத்திலிருக்கும் நந்தனர் ஆண்கள் மேல் நிலைப் பள்ளியில் நடந்த விழா வொன்றில். தமிழக அரிசன நலத் துறை அமைச்சர் சௌந்திர பாண்டியன் பேசும் போது, "பள்ளிச் சீருடையை இந்த ஆண்டும் வழக்கம் போல் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு விட்டன." என்று முழங்கினர்.

—உண்மை என்னவென்றால் இந்த ஆண்டு மாணவர்களுக்குச் சீருடைகள் வழங்கப்படவே இல்லை.

செய்யாததைத் துணிந்து செய்ததாகக் கூறி மார்தட்டிய அமைச்சரின் பேச்சைக் கண்டித்து, "பொய்... பொய்..." என்று மாணவர்கள் உரத்துக் குரல் எழுப்பவே "அடுத்த ஆண்டு சீருடை வழங்கப்படும்..." என்று கூறி அமைச்சர் உடனே 'பிளேட்'டைத் திருப்பிப் போட்டார்

'நீதி, நேர்மை, நாணயம், ஒழுக்கம் ஆகியவற்றைப் போற்றுவேன்...' என்று உறுதி மொழி எடுக்கும் எம். ஜி. ஆர். கட்சியினரின் 'லட்சணம்' எப்படி இருக்கின்றது பார்த்தீர்களா?

—ஜாகீர்

★

தமிழர் உணர்வை புரிந்துகொள்வீர்!

ஜனவரி—26 ஆம் தேதி தி மு கழகம் நடத்திய கறுப்புக்கொடி ஊர்வலம் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில் "இந்திப் பிரச்சினையில் தமிழக மக்கள் கொண்டுள்ள உணர்வினை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது..." என்று மத்திய அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் கூறியுள்ளார்.

நம்முடைய விருப்பமெல்லாம், பெர்னாண்டசைப் போல பிற மத்திய அமைச்சர்களும்—குறிப்பாக தலைமை அமைசசர் மொரார்ஜி தேசாயும் தமிழக மக்களின் உணர்வினைப் புரிந்து கொண்டு இந்தித் திணிப்பைக் கைவிட வேண்டும் என்பதுதான்!

எடுத்த பணி முடித்திடுவோம்!

'இந்தியா என்றால் இந்தி மொழி என்பதை மறக்கக் கூடாது'' என்றார் திரு. பக்தவத்சலம் 1964ல். இதன் விளைவு?

அடங்கிக் கிடந்த ஆற்றல் மறவர்படை ஆர்த்தெழுந்தது!

மாணவர் சமுதாயம் மொழிப் போரில் முழுமையாக ஈடுபட்டது.

காக்கை குருவிகளைச் சுடுவதைப் போல மாணவர்கள் திருப்பூர், பொள்ளாச்சி போன்ற பகுதிகளில் சுடப்பட்டார்கள்.

மொழி காக்கும் போரில் தளபதியாய்த்திகழும் தானைத் தலைவர் கலைஞர் பாளையங்கோட்டையில் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டார்.

விழியாம் மொழி காக்க தீக்குளித்தனர் தியாகச் செம்மல்கள் எட்டுப்பேர்!

இத்தகைய வீர வரலாறு தமிழகத்தில் நடந்திட காரணமாக இருந்தது அன்றைய காங்கிரஸ் அரசு.

மேலும் ஒரு வீர காவியம் தமிழக வரலாற்றில் எழுதப்பட வேண்டுமா?

வட நாட்டாருக்கு ஆங்கிலம் அன்னிய மொழி என்றால் தமிழர்களாகிய எங்களுக்கு இந்தியும் அன்னிய மொழிதான் எனும் நல்லோர் பலரின் தெள்ளிய கருத்துக்களை தெளிவுபடுத்தி, கழகத்தவரின் நெஞ்சங்களில் நீறுபூத்த நெருப்பாக இந்தித் திணிப்பு எதிர்ப்பு நிலை இருக்கிறது.

தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் மத்தியில் உள்ள தலைமையில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறதே தவிர அவர்கள் செயல் முறையில் மாறுபாடு இல்லை என்பதை அழுத்தம் திருத்தமாக கூறியுள்ளார். இக்கருத்து இந்தித் திணிப்பு விஷயத்திலும் சரியாக இருக்கிறது.

தட்டிக் கேட்க ஆளில்லா

கி. காசிவிசுவநாதன்

விட்டால் தம்பி சண்டப்பிரசண்டன் என்பது போல் மத்திய அரசு நடைபோடுகிறது.

ஆகவே—

இந்தித் திணிப்பை என்றும் எதிர்க்க தமிழகம் தயாராகிவிட்டது.

தமிழன் தமிழனாக வாழ வேண்டும். தமிழ் மொழியைப் போற்ற வேண்டும் எனும் பேரறிஞர் அண்ணாவின் லட்சியக் கனவுகளை நனவாக்க கழகம் தயாராகிவிட்டது.

"எது செய்ய நாட்டுக்கே
எனத்துடிக்கும் சிங்கமே
இன்றே! இன்னே!
புதுநாளை உண்டாக்கித்
தமிழ் காப்பாய்
புத்துணர்வைக்
கொணர்வாய் இங்கே!
ஆர்த்தெழுக தமிழுக்குத்
துறைதோறும்
துறை தோறும்
அழகு காப்பாய்
இதுதான் நீ செய்யத்தக்க
எப்பணிக்கும்
முதற்பணியாம்
எழுக நன்றே"

எனும் புரட்சிக் கவிஞரின் வீரமிக்க கவிதைகளில் காணும் கனலாம் கழகத்தவன் களம் புகத் தயாராகிவிட்டான்!

இளைய தலைமுறையின் இனிய தலைவா! இந்தித் திணிப்பை அன்றும். இன்றும், என்றும் எதிர்த்துவரும் தளநாயகன்; தமிழகத்திற்கு கலங்கரை விளக்கமாகக் காட்சியளிக்கும் ஒப்பிலாத் தலைவன் தித்திக்கும் தமிழில் கருத்துக் கருவூலங்களை வழங்கிய காவலன்! எத்திக்கிலும் புகழ் மணக்கும் சீர்மிகு பெருமைப் பெற்ற கலைநாயகன்! தமிழ்ச் சமுதாயத்தைக் காத்திட உழைக்கும் கலைஞரின் தலைமையில், 'உடல் மண்ணிற்கு உயிர் தமிழுக்கு என்று சூளுரைப்போம்!

எரிமலையின் சீற்றத்தை அடக்க இனி இந்தி ஆதிக்க வாதிகளால் இயலாது

பொங்கு கடலின் உணர்ச்சிச் சிகரமாகத் திகழும் தியாக சீலர்களின் செயல்களை முடக்க நினைக்கும் மதியீனர்களின் பொய் மூட்டைகளை அம்பலமாக்குவோம்!

சிரித்துச் சிரித்து மக்களை ஏமாற்றி வாழ நினைக்கும் வக்ரபுத்திக்காரர்களை அடையாளம் காட்டுவோம்!

பாம்புக்குத் தலையும் மீனுக்கு வாலையும் காட்டும் விலாங்கு மீனை ஒத்த மனித மனங்களின்வார்த்தை ஜாலங்களை வெட்ட வெளிச்சமாக்குவோம்!

கட்டளை பிறந்திடும்!
களிப்பு மிகுந்திடும்!
இட்டதைச் செய்திடுவோம்!
எடுத்த பணி முடித்திடுவோம்!
தமிழைக் காத்திடுவோம்!
தறுக்கரை ஒட்டிடுவோம்!
மானமறவர்களைக்
கூட்டிடுவோம்!
மக்கள் சக்தியைக்
காட்டிடுவோம்!

★

★★★0★★★★

உறுதிக்கு!
உழைப்பிற்கும்!!

எங்கள் பிரதிநிதிகள்:
கே. எம். ஜி. மாதவன்,
சென்னை-4
பி. நெடுஞ்செழியன்
பி. ஏ.
பாண்டிச்சேரி.

— விசுவர்சம்

★★★★0★★★

தீண்டாமை ஒழியாது

(4 ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த தம்மை ஒரு பெரியவராகவே படம் பிடித்துக் காட்டிய சாஸ்திரி அவர்களாலேயே அடாவடித்தனத்திலே பெயர் பெற்று அராஜகக் கோலோச்சிய இந்திரா காந்தியாலேயே முடியவில்லை

அவர்களெல்லாம் தீண்டாமையை ஒரு பொழுது போக்குப் பிரச்சாரமாகக் கொண்டிருந்தார்கள். தாழ்த்தப்பட்ட மக்களிடம் ஓட்டு வாங்கக் கூடிய, ஒரு தந்திரமாக மேற்கொண்டிருந்தார்கள்

அதனால்தான் அவர்கள் மனமுவந்து தீண்டாமையை ஒழிக்க முன்வரவில்லை. பகுத்தறிவுக் கொள்கையைஏற்றுத் தன் பெயருக்குப் பின்னால் தன்னுடைய சாதிப் பெயரை போடாமலிருக்க மனம் துணிந்ததில்லை

இவ்வளவுக்கும் காரணம் அவர்கள் கோழைகள் என்பது மட்டுமல்ல அவர்களைச்சூழ்ந்து கொண்டிருந்தது சாஸ்திரங்களும் சம்பிரதாயங்களுமே

வெள்ளையனிடமிருந்து விடுதலை பெற்றதை வரலாறாக்கிக் கொண்டு வீதிக்கு வீதி சென்று ஜே போடுவதில் காலம் கழித்துக்கொண்டிருக்கின்றோமே தவிர விடுதலை பெற்ற நாம் சில சுயநலவாதிகளிடம் அடிமைப்பட்டுக் கொண்டிருக்கின்றோம்: மெல்ல மெல்ல நம்முடைய அறிவை இழந்துகொண்டிருக்கின்றோம் தம்முடைய சுயமரியாதையை இன்னொரு சமுதாயத்திடம் அடகு வைத்துக்கொண்டிருக்கின்றோம். நாளுக்கு நாள் நம்முடைய தன் மானம் அழிந்து கொண்டிருக்கிறது என்ற உணர்வைக் கொஞ்சம் கொஞ்சமாக மறந்துகொண்டிருக்கின்றோம்.

இன்றைக்கு நாட்டு மக்களை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் செல்வதாகக் கூறிக் கொள்ளுகின்ற பெரும்பாலான அமைப்புகள் தீண்டாமையை ஒரு கொள்கையாக மட்டும் ஒத்துக் கொள்கின்றனவே தவிர, அதனை ஒழிப்பதிலே தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளவில்லை

அந்தந்த அமைப்புக்களிலே இருக்கின்ற படித்தவர்கள் கூடத் தம்முடைய பெயருக்குப் பின்னால் சாதிப் பெயர்களைப் போட்டுக் கொள்வதைக் கௌரவமாகவே கொண்டிருக்கின்றார்கள்.

தமிழகத்திலே பகுத்தறிவுக் கொள்கையைப் பரப்புவதிலே முழுமையாகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிற தி. மு. கழகமும் திராவிடர் கழகமும் தீண்டாமைக் கொள்கையை உண்மையாக உணர்ந்திருக்கின்றன. நமது கழகத்தவர்கள் தான் தங்களுடைய பெயருக்குப் பின்னால் சாதிப் பெயர் போடுவதை அநாகரிகமாகக் கருதிச் செயல்பட்டு வருகிறார்கள்.

இவைகளுக்கெல்லாம் மேலாக நமது தலைவர் கலைஞர் அவர்கள் தம் மகனுக்கு தாழ்ந்த வகுப்பிலே பெண் எடுத்துச்சமதர்மச் சமுதாயம் காணுவதிலேதமது ஆர்வத்தை நிலை நாட்டியிருக்கின்றார்கள்.

காலம் காலமாகவே பின்பற்றப்பட்டு வருகின்ற ஒரு மடமைக் கொள்கையைவிரைவில் ஒழித்து விடமுடியாது என்பதனையும் சட்ட மூலமாக ஒரேயடியாக வெட்டிச் சாய்த்துவிட முடியாது என்பதனையும் நன்குணர்ந்தே தலைவர் பெரியார் அவர்களும் பேரறிஞர் அண்ணா அவர்களும் தீண்டாமைப் பிரச்சாரத்தை மிக மிக மென்மையாக அதே நேரத்தில் தீவிரமாகச் செய்து கொண்டு வந்தார்கள்

அதனைக்கருத்திற்கொண்டு தான் கழகம் தமிழகத்தை ஆளும் பொறுப்பினை ஏற்றுக் கொண்டிருந்த நேரத்தில் தாழ்த்தப்பட்டவர்களை கோவில்களில் அர்ச்சகர்களாக்கும் திட்டத்தைக் கொண்டு வந்தது.

அதனை அமுல் படுத்துவதற்குள்ளாகவே உச்ச உயர் நீதி மன்றத்தில் வழக்கு மடமைக் கொள்கைக்குச் சட்டத்திலேயும் பாதுகாப்பு! இந்த நிலை இருக்கும்போது தீண்டாமை ஒழியுமா சமதர்மம் மலருமா. காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

இராதாபுரம் நிகழ்ச்சி; அனைத்துக் கட்சித் தலைவர்களின் கண்டனம்!

தி. மு. க. தலைவர் கருணாநிதியை உளி வீசித் தாக்க முயற்சித்த சம்பவத்தைப் போல பல சம்பவங்கள் தமிழகத்தில் நடந்து வருவது கண்டு வருத்தமடைகிறேன், இம்மாதிரி வன்முறையில் யார் ஈடுபடுகிறார்களோ, எந்தக் கட்சிக் காரர்கள் அதை ஊக்குவிக்கிறார்களோ அந்தக் கட்சியைச் சேர்ந்த தலைவர் இந்தமாதிரி வன்முறைச் சம்பவங்கள் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது அவரது கடமையாகும், பொறுப்புமாகும்.

கருணாநிதியைத் தாக்க முயற்சித்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் மீது அரசு தக்க நடவடிக்கை எடுத்து, இம்மாதிரி சம்பவங்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

எஸ் வி. லட்சுமணன்
ஜனதாக் கட்சித் தலைவர்

★

கருணாநிதிமீது திட்டமிட்டுத் தாக்குதல் நடந்திருப்பது வன்மையாகக் கண்டிக்கத் தக்கது. அண்மைக் காலத்தில் எதிர்க் கட்சிகளுக்கு எதிராக நடத்தப்பட்ட பல்வேறு தாக்குதல்களின் தொடர்ச்சியாகத்தான் இந்தச் சம்பவத்தையும் கருத வேண்டியிருக்கிறது. இம்மாதிரி வன்முறை நிகழ்ச்சிகள் அனைத்து ஜனநாயகவாதிகளாலும் கண்டிக்கத் தக்கது.

ஏ. பி. சிந்தன்
மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்

★

கருணாநிதியைத் தாக்கி, உயிருக்கு ஆபத்து விளைவிக்க நடந்த இந்த முயற்சி அநாகரீகமானது - காட்டுமிராண்டித்தனமான செயலாகும்.

பொறுப்புள்ள ஒரு எதிர்க்கட்சித் தலைவரை பகிரங்கமாகத் தாக்க முயற்சித்தது கண்டிக்கத் தக்கது,

ஆளுங்கட்சிக் காரர்களும், எம். ஜி. ஆரும் இதைத் தடுத்து நிறுத்த வேண்டும். சர்வகட்சியினரை கூட்டி ஒரு நடைமுறையை உருவாக்க வேண்டும்,

— ஆறுமுகசாமி
தமிழ்நாடு காங்கிரஸ் துணைத்தலைவர்

★

கருணாநிதி மீது தாக்குதல் நடந்திருப்பது கண்டு அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன் இத்தகைய வன்முறைச்செயல்கள் தொடருமானால் ஜனநாயகத்தின் அஸ்திவாரமே தகர்ந்து கலகலத்துப் போகும்.

எம். ஜி. ஆர். தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அப்பன்ராஜ்
இந்திரா காங்கிரஸ் தொழிற்சங்கத் தலைவர்

★

தமிழகத்தில் வளர்ந்து வரும் வன்முறைகளுக்கு இச்சம்பவம் மேலும் ஒரு எடுத்துக் காட்டு.

ஏற்கனவே கடந்த அக்டோபர் 23-ந் தேதி கருணாநிதி வீட்டைத் தாக்கினர். இப்போது கருணாநிதி மீது உளிவீசிக் கொல்லமுயற்சிநடந்துள்ளது

இது அநாகரீகமான செயல்மட்டுமல்ல; அரசியல் பின்னணியும் கொண்டதாகும்.

அரசியல் நோக்குள்ள இந்த வன்முறைச் செயலை இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.

த. பாண்டியன்
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிதலைவர்.

சிவப்புவிளக்குச் சாமியார் மீது நடவடிக்கை!



கட்டுப்பாடற்ற உடல் உறவு மூலம் கடவுளைக் காண முடியும் என்ற ஒரு காட்டுமிராண்டித்தனமான கருத்தைப் பரப்பிவருபவர் ரஜினீஷ் 'யோகி' என்று சொல்லிக்கொண்டு தன்னுடைய ஆசிரமத்தில் 'போக' விளையாட்டுக்களை நடத்த அனுமதித்து வரும் இந்தரஜினீஷ், அரசியலில்மதத் தலைவர்களின் ஆதிக்கம் கையோங்க வேண்டும் எனப் பிரச்சாரம் செய்து வருகிறார். இந்தியர்கள் மட்டுமல்லாது பல வெளிநாட்டு ஆண் பெண்களும் 'சிஷ்யர்களாகவும், சிஷ்யைகளாகவும்' இவருடைய ஆசிரமத்தில் தங்கியிருந்து அருவருப்பான காமக் களியாட்டங்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இவருடைய ஆசிரமத்தில் நடக்கும் 'திருவிளையாடல்கள்' குறித்து ஏராளமான புகார்கள் மத்திய அரசுக்கு அன்றாடம் வந்துகொண்டே இருக்கின்றன.

விரைவிலேயே ரஜினிஷியின் ஆசிரமம் சோதனையிடப்படும் எனத் தலைமை அமைச்சர் மொரார்ஜி தேசாய் உறுதி அளித்துள்ளார்.

நம் நாடு
ஆசிரியர்: மு. கருணாநிதி

சந்தா விவரம்

ஓராண்டு சந்தா ரூ. 26-00

ஆறுமாத சந்தா ரூ. 13.00

ஆறு மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

கனவுகளைக் கலைத்துக்கொள்ளுங்கள்!

அருணா சண்முகம்

தலைவர் மீது வைத்த குறி தவறாமல் பாய்ந்திருக்கிறது. ஆனால் அவர் தலை குனிந்து தப்பி இருக்கிறார்.

அவர் மீண்டும் நிமிர்ந்து விட்டார் ஆனால் தமிழகம் குனிந்த தலையை நிமிர்த்திக் கொள்வது எப்போது?

அவர் பயணத்தைத் தொடர்ந்து விட்டார்—செயலற்று நிற்கும் தமிழகம் நிலைக்கு வருவது என்று?

பொது வாழ்வில் இதுவெல்லாம் 'எதிர்பார்ப்புத்தான்' என்று எண்ணி நகை யாடிவிட்டுக் கலைஞர் களத்திலேயே நிற்கிறார். அவர் தாங்கிக் கொள்ளலாம்,

அவர் தப்பியதால்—

ஒரு பிரளயம் தமிழகத்தைச் சந்திப்பது, தவிர்க்கப் பட்டுள்ளது—

ஒரு பூமிக் குலுக்கலில் இருந்து தமிழகம் தப்பி விட்டது—

ஒரு எரிமலை வெடிப்பு தடுக்கப்பட்டுள்ளது—

அரசியல் வேறுபாடுகளைக் கூட அடுத்த கட்டத்திற்கு அனுப்பி விட்டு அனைத்துக் கட்சித் தலைவர்களும் கண்டித்து உள்ளனர்.

இந்தக் 'காலக் குறி'—இது ஆட்சியாளர்க்குக்கெட்ட அறிகுறி அவ்வளவுதான்—அதிகமாக விளக்கத் தோன்றவில்லை.

அன்று அவர் ஆட்சியில் இருந்தபோது...

கொடும்பாவி கொளுத்தி விளையாடினார்கள்—விபரம் தெரியாததுகள் என விட்டு வைத்தோம்.

பிறந்த நாளைத் துக்க நாளாக்கி ஆர்ப்பாட்டம் செய்தார்கள்—அரைகுறைகளிடம் அதற்கு மேல் எதிர் பார்ப்பது தவறென்று அனுமதித்தோம்.

தலை வெட்டிப் பேச்சுக்கள்—தாங்கினோம்.

தலைமைச்ய—:தடயம் இல்லாமல் கோபாலபுரத்தில்' என்று இழுத்தது! பாவிகளை இரட்சித்தோம்.

விட்டு வைத்ததை வேறு அர்த்தம் கொண்டு விட்டார்கள், அந்த விவஸ்தை கெட்டவர்கள். மன்னித்ததை மாறாக நினைத்து விட்டார்கள், அந்த ✓மதோன்மத்தர்கள். அரசியல் பயிலட்டும் என்று பார்த்தால் அவசர இயல் படித்து அதையும் நம்மிடமே பதம் பார்க்க ஆரம்பித்து விட்டார்கள்.

இரண்டு தலைமுறை இயக்கப் பணி—இரண்டு பொதுத் தேர்தல் மூலம் ஆட்சிப் பணி என்று இந்தத் தமிழ் மண்ணின் வளர்ச்சிக்காகத் தன்னையே பணயம் வைத்த தலைவனைப் பணிய வைக்க—அவன் பயணத்தின் போதே ஆயுதம் ஏந்தியுள்ளனர்

அவர் பணியவில்லை—

அவர் பயணம் அதற்கப்புறமும் தொடர்ந்துள்ளது. திட்டமிட்டப்படி முடித்துக் கொண்டே திரும்பியுள்ளார் -கோபாலபுரம்.

அதுதான் கழகத் தலைவரின் தனித்தன்மை.

அவர் தலைநகர் திரும்பியிருக்கலாம் ... ஆனால் ஒவ்வொரு தமிழ் மகனும் தென் கோடியைப் பார்த்துப் புருவங்களை நெறிப்பது இன்னமும் திரும்பவில்லை.

தெருக்கோடி மனிதர்களை மீட்பதற்காக உழைத்த தலைவன் தென் கோடியில் மீண்டபின்னும் சிந்தனை தொடர்கிறது—

இதற்கொரு முடிவு கண்டாக வேண்டும்-இதை நினைப்பதை யாரும் தடுத்து விட முடியாது,

ஏன்? தற்காப்பை யாரும் தடுத்துவிட முடியாது.

'பொது வாழ்வில் இறங்கி விட்ட காரணத்துக்காகவே' மாற்றுக் கருத்து கொண்டவர்கள் 'நித்திய கண்ட' நிலையில் நெருக்குருக வேண்டுமா!

அது. என்ன அரசியல் நாகரீகம்?

எந்த வகை நீதியில் உள்ளடக்கம்?

எப்படிப்பட்ட நியாயத்தின் அத்தியாயம்?

எதற்கெடுத்தாலும் அறிக்கை. என்ன குறை சொன்னாலும் அர்த்தம் கற்பித்து. ஒரு அறிக்கை—என்று முதல் தரம் முதல் மூன்றும் தரம் வரை முந்திக் கொண்டு அறிக்கை அணிவகுப்பு நடத்துவார்களே — அவர்களெல்லாம் எங்கே போய் விட்டனர்? ஏனிந்த அமைதி? அர்த்தம் புரிகிறது.

இது என்ன நாடா? இல்லை காடா?

நடப்பதென்ன மக்களரசா? தர்பாரா?

அவர்களுடைய அமைதி, ஆத்திரத்தை வரவழைக்கவில்லை—அருவருப்பைத்தான் கூட்டுகின்றது.

எங்கே போய்க்கொண்டிருக்கிறது. நாடு?—அரசியல் நோக்கர்கள் கேட்கிறார்கள்.

எதில் போய் முடியும் இது?—நியாயமான கேள்வி சிலரைச் சித்திரவதைப் படுத்துகின்றது,

கலைஞர் தாங்கலாம்—அவரை உயிராக நினைக்கும் இலட்சக்கணக்கான இளைஞர்கள்....

தலைவர் தாங்கலாம்—தமிழ் உணர்வு மிக்கவர்கள்...

எப்படித் தாங்க முடியும்? உயிரைப் பறி கொடுத்து விட்டு உலா வர எந்த மூடன் தான் முன் வருவான். இதற்கொரு முடிவு கண்டாக வேண்டும்......

பல்வேறு கட்சித் தலைவர்களும் பலவாறாகக் கூறி விட்டார்கள்

ஆளும் தரப்பிலே அமைதி. தலையுண்டிருக்கும் காவல் துறையையும் முழுக்க முழுக்க நம்பிப் பயனில்லை

இறுதியில் புலப்படுவது ஒன்றுதான்—

நமக்கு நாமே...இதுதான் இறுதி முடிவு இனி எவரையும் நம்பிப் பயனில்லை. இது ராதாபுரம் தந்த பாடம்.

கருஞ்சட்டைப் படைத் தளபதியின் பயணங்களில், உயிரைப் பணயம் வைத்து அவரைப் பாதுகாப்போம். அரண் அமைத்து அவருக்குத் துணை நிற்போம்!

'உடன் பிறப்பே!' என்ற ஒரு வார்த்தையில் சிலிர்த்ரச் சமையும் கழகத்தவனுக்கு அந்தத் தலைவனை முன் நிறுத்தினால் உயிர் கால் தூசுக்குச் சமம்.

சோதரர்களே!

போவதெனில்—அந்த உயிர்.
போகட்டும்—அந்தப் புனிதன்
காலடி மலர்களில்...
தறுக்கர்களே!
தூங்கிய புலியை
இடறி விட்டீர்கள்—
கனவுகளைக் கலைத்துக்
கொள்ளுங்கள்

தலைவா!
நன்றிக் கடன் தீர்க்க—
வாய்ப்புக் கிடைத்து விட்டது.
உலா தொடரட்டும்......!

★

அ. தி. மு க. குண்டர்களின் வன்முறைகளை முறியடிக்க அணி திரள்வோம்!

தமிழகத்தில் தொழிலாளர்கள், போலீசாராலும் அ. தி. மு. க. வின் வெண்படை குண்டர்களாலும் தாக்கப்படுகிறார்கள். தமிழக விவசாயிகள் தங்களது உற்பத்தி பொருளுக்கு நியாயமான விலை கோரி போராடுவதில் இந்தியாவிலேயே முன்னணியில் இருக்கிறார்கள். அவர்களை போலீசும்,. அ. தி. மு. க.குண்டர்களும் தாக்குகிறார்கள். அதேபோல் எதிர்க் கட்சியினரையும் தாக்கி வருகின்றனர்

போராடும் மக்களுக்கு எதிராக—பிற அனைத்து எதிர்க்கட்சியினருக்கும் எதிராக அரசுஎந்திரத்தைமுழுமூச்சுடன்முடுக்கிவிட்டுவன்முறையில் ஈடுபட்டுள்ளார். தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். எம். ஜி. ஆர். அரசின் அடக்கு முறையை எதிர்த்தும், ஆளும் கட்சியின் குண்டர் படை தாக்குதலை எதிர்த்தும் தமிழகத்திலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் உணர்ச்சி பூர்வமாக ஒன்றுபட்டும்போராடி வருகின்றன. இந்த உணர்ச்சி பூர்வ ஒற்றுமை அரசியல் ஒற்றுமையாக வர வேண்டும்.

—இராஜேஸ்வரராவ்
(இந்தியக் கம்யூனிஸ்ட்டு கட்சிப் பொதுச்செயலாளர்)

★

வரவிருக்கும் பொன்னுள்!

ஒரே ராகம், ஒரே பாடல், ஒரே தாளம்! இப்படி ஒரு சிலர் அதுவும் பதவிப் பொறுப்புள்ளவர்கள் — நாட்டு மக்களால் நாடாளக் கோட்டைக்கு அனுப்பிவைக்கப் பட்டவர்கள்—தாம யார், தாம் எப்படி இந்த இருக்கையிலே வந்து அமர்ந்திருக்கிறோம் என்பதை யெல்லாம் ஆய்ந்து பார்க்காமல் கிடைத்த மேடையில் ஒதுக்கப்பட்ட நேரத்தில், தமிழினத்தின் ஒரே தலைவராக இருக்கிற கலைஞரைப் பழிக்கும் போக்கில் தகாத சொற்களால் பயமுறுத்தி நேரத்தை வீணாக்கித் தத்தம் கடமைகளை மறந்து பேயாட்டம் போட்டுக் கொண்டிருக்கின்றனர்,

தற்போது தமிழக அமைச்சர்கள் சிறுகச்சிறுக தம்மைத் தாழ்த்திக் கொள்வதிலே முனைந்திருக்கிறார்கள்.

ஒரேகதைதைவைத்து அதிலேயேபல்வேறு மாற்றங்களைச் செய்து வெவ்வேறு கதைகளாக்கி விதவிதமான பாத்திரப் படைப்புகளை உருவாக்கி அதிலே எம். ஜி, ஆர், நான்கு பேரை உதைப்பவராகவும் முரடர்களிடம் சிக்கிய பெண்ணைக் காப்பவராகவும் முடிவில் அந்தப் பெண்ணைக் காதலித்து அவள் மடியில் தலைவைத்துப் படுத்துக்காதல்செய்பவராகவும் நடிக்கின்ற காட்சிகளைப் பார்க்கும்போது ஒரே கதை ஒரே வசனம். ஒரே நடிப்பு இப்படித்தானே இருக்கிறது.

எந்தப் படத்திலேயும் அவருடையகுணச்சித்திர நடிப்பு வெளியானது. இல்லையே அவருடைய அமைச்சர்கள் மட்டும் எப்படி இருப்பார்கள்?

இப்போது முதல்வர் என்கின்ற பதவியிலே அமர்ந்திருக்கின்றவர் இதற்கு முன்னுல் அன்புள்ளம் கொண்ட பேரறிஞர் அண்ணு அவர்களிடத்தும் தன்னை ஆளாக்கிவிட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தினிடத்தும் நடித்தார். அதன் மூலம் மக்களிடையே செல்வாக்கு மிக்கவரானுர். பின்னுல் மக்களிடத்தும் நடத்தார். கலைஞர் அவர்களிடத்திலும் நடித்தார். தனக்குள்ள ரசிகர் மன்றங்களைப் பொதுமேடையாக்கித் தனிக்கட்சித் துவங்கினுர். ஆளும் பொறுப்பையே பெற்றுர்.

எந்தவித மூலதனமும் இல்லை ஏற்றம் பெற்றுவிட்டார்.

இப்போதும் மக்கள் முன்னுலே நடித்துக் கொண்டிருக்கிறுர் இன்னும் நடிப்பேன் என்கிறுர்

உங்களைவிட நன்ருக மிக நன்ருக நாங்களும் நடிப்போம் என்று இவரிடமே இவரது சீட கோடிகளும் பக்த மகா சிகாமணிகளும் நடிக்கத் துவங்கிவிட்டார்கள்.

முதலில் நடித்தார்கள். ஏதோ போகட்டும் என்று இவர்களுக்கெல்லாம் அமைச்சர் பதவியைக் கொடுத்தார். இப்போதும் தமக்குக் கிடைத்திருக்கின்ற இப்பதவி பறிக்கப் பட்டுவிடக்கூடாதே இன்னொருவர் கைமாறி விடக்கூடாதே என்ற அச்சத்தில் நடித்துக் கொண்டிருக்கிறுர்கள்.

முதலமைச்சர் எத்தனை வில்லன்களைப் பார்த்திருப்பார் அவர்கள் புரிந்த எவ்வளவு சாகசங்களைப் புரிந்துகொண்டிருப்பார். தெரிந்து வைத்திருப்பார்.

அவருடைய பட்டாளமே இப்போது நடிப்புப் பயிற்சிப் பள்ளியாகி விட்டிருக்கிறது

வேட்டியை வரிந்து கட்டிக்கொண்டு வீதியிலே கம்பு வீசுகிறுர் ஒரு அமைச்சர்;

மல்லை - நடராசன்

விட்டேனு பார் கலைஞரை என்றுவீராப்புப் பேசுகிறுர் மற்ருேர் அமைச்சர்.

இங்ஙனம் ஆளுக்கொரு நாட்டு வெடிகுண்டுகளை வீசிக்கொண்டிருக்கிறுர்கள். இன்றைய அமைச்சர்கள். அவர்களைவிடத் தீவிரமாக உளியை வீசுகிறுன் அவர்களின் ரசிகன்!

இதில்தான் திருப்தி கொள்கிறுர்கள் அவர்களும் அவர்களை ஆட்டிவைக்கின்ற முதல்வரும்!

எத்தனையோ பிரச்சினைகள் தலைக்குமேல் தொங்கும் கத்தியாக முதலமைச்சரின் இருக்கைக்கு மேலே சுழன்றுகொண்டிருக்கின்றன. நாட்டுமக்கள் நம்பிக்கை வைத்து அளித்த வாக்குச் சீட்டிற்குக் கைம்மாறு வாக்குறுதியாகத்தான் வந்திருக்கிறது இதுவரை எதையும் செயல்படுத்த முடியவில்லை

வாக்குரிமை பெற்ற ஒவ்வொரு குடிமகனும் மனம் புழுங்கிக்கொண்டிருக்கிறுன். மயக்கத்திலே மதியிழந்தோமே இப்போது தலைவிதியை நொந்து சொல்வானேன் என்று அறிவாற்றுமைக்காக வருந்திக்கொண்டிருக்கிறுன்.

எம்.ஜி,ஆரை எதிர்த்து எல்லோருமே போர்க்குரல் கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள் மீண்டும் திரைப்படத்திலே அட்டைக் கத்தி தூக்கவேண்டி அங்குபோய்விடத் துடிக்கிறுர்! நேரம் பார்த்துக் கொண்டிருக்கிறுர்.

ஆற்றிலே ஒரு காலும் சேற்றிலே ஒரு காலும் அவருக்கு கைவந்த கலையல்லவா?

இன்னும் கொஞ்ச நாள் போனுல் சட்டமன்றத்திலே படபிடிப்பு நடக்கும். கேள்வி நேரத்தில் மற்ற அமைச்சர்கள் விடைகூறிக் கொண்டிருக்கும்போது இவர் சும்மாதானே இருப்பார். அதே நேரத்தில் படப்பிடிப்பைத் துவங்கலாம் அல்லவா? அதேபோலப்படப்பிடிப்பு நிலையங்களிலேகூட சட்டமன்ற நிகழ்ச்சிகளை வைத்துக்கொள்ளலாம்! அங்கும் அவருக்கு ஓய்வு கிடைக்கும் நேரத்தில் சட்டமன்ற நிகழ்ச்சிகளையும் கவனித்துக்கொள்ளலாம்.

குட்டிச் சுவருக்குள்ளிருந்து ராகம் இசைப்பவர்களைக் கோட்டைக்குள்ளே அமர்த்திவைத்தனர் தமிழ்நாட்டு மக்கள், புன்மையின் மொத்தச் சொந்தக் காரர்களை புத்தன் என்றும் ஏசு என்றும் போற்றிப் புகழ்ந்து தன் தொழிலுக்குக் களங்கம் கற்பித்துக் கொள்ளுகின்றன ஒரு சில செப்தித்தாள்கள்,

புரட்சியென்றும் புதுமையென்றும் பொய் சொல்லி நாட்டுமக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கும் ரசிகத் தொண்டர்கள் வேண்டுமானுல் எம். ஜி. ஆர் மாயையிலிருந்து மீள விரும்பாது இருக்கலாம். ஆனுல் —

அறிவுந் தெளிவுமுள்ளவர்கள். இன்றைய அரசியலைப் புரிந்துகொண்டிருப்பார்கள். அ. தி. மு. க. வினரின் நடைமுறைகளைத் தெரிந்து வைத்திருப்பவர்கள் வன்முறைகளின் துணைகொண்டு ஆட்சி நடத்தும் எம். ஜி. ஆரை அந்த அரசியலிலிருந்து நிரந்தர ஓய்வளிக்கத்தான் போகிறுர்கள்!

அந்த நன்னுளே தமிழர் வாழ்வின் பொன்னுள்

மதிப்புரை:

'கண்ணியம்'

பேரறிஞர் அண்ணு அவர்கள் நமக்கு வழங்கிச் சென்ற கடமை, கண்ணியம். கட்டுப்பாடு என்னும் முப்பெரும் அறநெறிகளில் ஒன்றின் பெயரால் வெளிவரும் ஏடுதான் கண்ணியம்.

திரு. வெற்றிகொண்டான் அவர்களை சிறப்பாசிரியராகவும், திரு, ஆ கோ. குலோத்துங்கன் அவர்களை ஆசிரியராகவும். திரு. தில்லை பெ. இராமநாதன். திரு. சிதம்பரம் செயராமன் ஆகியோரை இணை ஆசிரியர்களாகவும் கொண்டு வெளிவரும் இவ்விதழ் முழுக்க முழுக்கக் கழகப் பிரசாரத்துக்கே தன்னை ஒப்படைத்துக் கொண்டுள்ளது பாராட்டத்தக்கது.

முதல் இதழில் கழகத் தலைவர் கலைஞர் அவர்களின் திருஉருவட்படமும் இரண்டாவது இதழில் பொதுச் செயலாளர் பேராசிரியரின் திருவுருவப்படமும், அட்டையில அணிசெய்கின்றன கலைஞர் பேராசிரியர், மற்றும் கழக முன்னணி எழுத்தாளர்களின் கொள்கை விளக்கக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. சிறப்பாசிரியர் வெற்றிக் கொண்டானின் கேள்வி பதில்கள் சுவை மிக்கவையாக உள்ளன. கழகத்திற்கோர் அணிகலனுகவும். தலைவர் கலைஞருக்கோர் படைக்கலனுகவும் கண்ணியம் வெளிவருவது வரவேற்றுப் பாராட்டத்தக்கது.

முகவரி:

கண்ணியம்

2. இரண்டாவது சர்துலக் சாலை,

அசோகர்நகர். சென்னை: 82.

★

கொள்கை குன்றும்

(2 ம் பக்கத் தொடர்ச்சி)

திற்கு 'அண்ணு பாலம்' எனும் பெயர் சூட்டிய கலைஞரை … தாம் முதல்வராக இருந்த காலத்தில் தமிழகமெங்கும் புதியதாகத் திறக்கப்பட்ட பெரும்பாலான கல்லூரிகளுக்கெல்லாம் 'அண்ணு'வின் பெயரைச் சூட்டி மகிழ்ந்த கலைஞரை … தமிழகத்தின் பட்டிதொட்டிகளிலெல்லாம் ஆயிரக் கணக்கான அண்ணுவின் திருவுருவச் சிலைகளை நிறுவி சிந்தை மகிழ்ந்த கலைஞரைப் பார்த்தா "இப்போதெல்லாம் அண்ணுவின் பெயரைச் சொல்கிறுர் கருணுநிதி" என்று அண்டப் புளுகை அள்ளிவீசுகிறுர் இன்று நாடாளவந்த இந்த நாடோடி மன்னர்?

அண்ணு உருவாக்கிய இருவண்ணக்கொடியினை அகில தமிழர்களின் அரவணைப்பாகத் தூக்கிப்பிடித்துவரும் கலைஞரையா அண்ணு கண்ட உதய சூரியனை அப்படியே காத்துவரும் கலைஞரையா தமிழர் நலங்காக்கத் தி.மு. கழகத்தை நெருக்கடி காலத்திலேயும் உருமாற்றுத கலைஞரையா 'திடீரென அண்ணுவை நினைக்கிறுர்' என்று அவதூறு கிளப்புகிறுர் இந்த அனுதை இரட்சகர்?

டில்லி அரசியல் சந்தையில் அண்ணுவின் கொள்கையினை ஆளுவோர்க்கு ஏற்றபடி திரித்துரைப்பதையே தொழிலாகக் கொண்டுள்ள கோமாளி எம். ஜி ஆர். கொள்கைக் குன்றுன கலைஞரைக் கண்டா கோழையெனக் கூறுவது?

டாக்டரை நேரில் சந்திக்க

முடியாதவாகளுககு வைத்திய ஆலோசனை இலவசம் உங்களுக்கு அல்லது குடும்பத்தில் ஏற்பட்டிருக்கும் வியாதிகளின் முழு விவரங்களை உலகப் புகழ் பெற்ற

பழனி டாக்டர்

எஸ். காளிமுத்து

R.M.P. (IND. V. V. C. A. I. H.)

பழனி — 624601

என்ற விலாசத்திற்கு எழுதி அனுப்புங்கள். எங்கள் ஆலோசனைகளும். சிகிச்சை விபரங்களும் உங்கள் விலாசத்திற்கு இலவசமாக அனுப்பப்படும்

போன்: 316. 316 ஏ. 420 தந்தி: சித்தர்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு கருணாநிதி அவர்களால் அழகிரி அச்சகத்தில் (156 சூரியநாராயண செட்டித்தெரு, இராயபுரம்- 13) அச்சிட்டு வெளியிடப்பட்டது

நிர்வாக அலுவலகம் 'அறிவகம்' 508 அண்ணுசாலை, தேனும்பேட்டை சென்னை—600018

தொலைபேசி: 441009

அண்ணன் துயிலும் வங்கக் கடற்கரை நோக்கிச் செல்லும் அமைதி ஊர்வலம் (3 2 79)